விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 161 வள்ளுவர் ஆண்டு 2056 வைகாசி 15 வியாழக்கிழமை (29.05.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

# யாழில் காணி மோசடி தொடர்பாக நடவடிக்கை எடுத்த பொலிஸாருக்கு இடமாற்றம்

## அவுஸ்திரேலியத் தூதுவரிடம் வடக்கு ஆளுநர்

(யாழ்ப்பாணம்)

யாழில் காணி மோசடிகள் இடம்பெற்று வருவதாகவும் இது தொடர்பில் நடவடிக்கை எடுத்த பொலிஸ் அதிகாரிகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் இலங்கைக்கான அவுஸ்திரேலியத் தூதுவரிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான அவுஸ்திரேலியத் தூதுவர் போல் ஸ்ரீபன்ஸூக்கும் வடக்கு மாகாண ஆளுநருக்கும் இடையிலான 15ஆம் பக்கம் பார்க்க



## கரணவாயில் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(கரணவாய்)

கரணவாய் கிழக்கில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் கரணவாய் கிழக்கு கரவெட்டியைச் சேர்ந்த ஈசன் ஐயா என்ற 5 பிள்ளைகளின் தந்தையே சடலமாக மீட்கப் பட்டவராவார்.

15ஆம் பக்கம் பார்க்க

## பஸ்ஸின் மிதிபலகையிலிருந்து தவறிவிழுந்த இளைஞன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

பஸ்ஸின் மிதிபலகையிலிருந்து தவறிவிழுந்த இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் புலோப்பளை, பளையைச் சேர்ந்த அன்ரனி அருள்தாஸ் நிதுராஜ் (வயது-26) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

மேற்படி இளைஞன் 15ஆம் பக்கம் பார்க்க

## விசமிகளால் சேதமாக்கப்பட்டது

# தமிழின அழிப்பு நினைவுத் தூபி

## கனடா பொலிஸார் தீவிர விசாரணை

(ஒட்டாவா)

கனடா பிரம்டன் நகரில் அமைக்கப்பட்டுள்ள தமிழின அழிப்பு நினைவுத் தூபி பகுதியில் பொருத்தப் பட்டுள்ள சில மின் குமிழ்கள் இனந்தெரியாத நபர்களால் சேதப்படுத்தப்பட்டுள்ளது. (16ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.போதனாவில் இரத்த வாந்தி எடுத்த குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் இரத்த வாந்தி எடுத்த குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

இதில் திருகோணமலை அன்புவெளிபுரத்தைச் சேர்ந்த விஜயகுமார் ஜெயராசன் (வயது- 48) என்ற மூன்று பிள்ளைகளின் 15ஆம் பக்கம் பார்க்க

# முதலமைச்சர் தும்புத்தடி என்றால் எம்.பிக்கள் என்ன விளக்குமாறா?

## கஜேந்திரகுமாரின் கருத்துக்கு சிவாஜிலிங்கம் பதிலடி

(யாழ்ப்பாணம்)

'முதலமைச்சர் தும்புத்தடி என்றால், பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ன விளக்குமாறா?' என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசியப் பேரவையின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராக முன்னாள் பாராளுமன்ற 15ஆம் பக்கம் பார்க்க

## விபத்தில் மரணமடைந்த இந்தியத் தூதரக அதிகாரிக்கு சந்தோஷ் ஜா உட்பட பலர் அஞ்சலி



16ஆம் பக்கம் பார்க்க

## எதிர்வரும் 31ஆம் திகதி உறவுகள் மாபெரும் போராட்டத்துக்கு அழைப்பு

(முல்லைத்தீவு)

எதிர்வரும் 31ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் மாபெரும் போராட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

முல்லைத்தீவு ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட காணாமல் 16ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு கூட்டம் நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மாவட்டச் செயலகக் கேட்போர்கூடத்தில் நடைபெற 15ஆம் பக்கம் பார்க்க

## உணவு ஒவ்வாமை காரணமாக விசுவமடுவில் 21 மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதி

(முல்லைத்தீவு)

உணவு ஒவ்வாமை காரணமாக முல்லைத்தீவு விசுவமடுவில் 21 மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விசுவமடுப் பகுதியில் அமைந்துள்ள பாரதி வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட உணவு ஒவ்வாமை காரணமாக ஒரே வகுப்பைச் சேர்ந்த 21 மாணவர்கள் தருமபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து 10 15ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில்லையம்பதியாள் துணை

## சீர்மேவு யாழ்ப்பாணம் கோண்டாவில் ஈழத்து தில்லையம்பதி
# அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்
## ஐம்பதாவது ஆண்டு
## வசந்த வைகாசி மஹோற்சவ பெருவிழா - 2025

30.05.2025 வெள்ளி முற்பகல் 10.00 மணிக்கு கொடியேற்றம்
01.06.2025 ஞாயிறு இரவு 8.30 மணிக்கு அன்னசப்பறம்
03.06.2025 செவ்வாய் இரவு 8.30 மணிக்கு திருமஞ்சம்
04.06.2025 புதன் இரவு 7.00 மணிக்கு வசந்தோற்சவம்
05.06.2025 வியாழன் இரவு 8.30 மணிக்கு கைலாசவாகனம்
06.06.2025 வெள்ளி இரவு 8.30 மணிக்கு முத்துச் சப்பறம்
07.06.2025 சனி இரவு 8.30 மணிக்கு பூச்சப்பறம்
08.06.2025 ஞாயிறு பிற்பகல் 2.00 மணிக்கு வேட்டைத் திருவிழா (ஸ்ரீஞான வைரவர் ஆலயம்)
08.06.2025 ஞாயிறு இரவு 8.30 மணிக்கு சப்பறத் திருவிழா
09.06.2025 திங்கள் முற்பகல் 10.00 மணிக்கு ரதோற்சவம்
10.06.2025 செவ்வாய் நண்பகல் 12.00 மணிக்கு தீர்த்தோற்சவம்
10.06.2025 செவ்வாய் இரவு 7.00 மணிக்கு கொடியிறக்கம்
11.06.2025 புதன் இரவு 8.30 மணிக்கு பூங்காவனம்
12.06.2025 வியாழன் காலை 7.00 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகம்
12.06.2025 வியாழன் இரவு 7.00 மணிக்கு வைரவர் மடை
16.06.2025 திங்கள் பிற்பகல் 3.00 மணிக்கு வருடாந்த வைகாசி பொங்கல் விழா



### தினசரி உற்சவம்

காலை 7.30 மணிக்கு அபிஷேகம், முற்பகல் 9.00 மணிக்கு மூலஸ்தான பூஜை, முற்பகல் 9.30 மணிக்கு ஸ்தம்ப பூஜை, முற்பகல் 10.30 மணிக்கு வசந்தமண்டப பூஜை, முற்பகல் 11.30 மணிக்கு அம்பாள் வீதி உலாவரும் காட்சி, மாலை 5.00 மணிக்கு சாயரட்சை பூஜை, மாலை 5.30 மணிக்கு ஸ்தம்ப பூஜை, மாலை 7.00 மணிக்கு வசந்தமண்டப பூஜை, இரவு 8.30 மணிக்கு அம்பாள் வீதி உலாவரும் காட்சி

**திருக்கோயில் பிரதமகுரு**
"ஆகம கலாசூரி" "சத்ஜோயாதசிவம்"
சிவப்பிரம்மஸ்ரீ வைத்தீஸ்வர சுஜேந்திர சிவாச்சாரியார்
(தில்லையம்பதி)

**மங்கள வாத்தியம்**
சிவதாஸ் குழுவினர்
(இணுவில்)

(C-3077)

மஹோற்சவ காலங்களில் தினமும் அன்னதானம் இடம்பெறும்

ஈழத்து தில்லையம்பதி "ஈழத்து தில்லையம்பதியாளே சிவகாம சுந்தரியே சரணம்" திருக்கோயில் பரிபாலன சபை

## நன்றி நவிலலும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்



### அமரர் பிரபாகரன் சந்திரவதனா (சுந்திரா)

எமது குடும்ப ஒளிவிளக்கு நோயுற்ற வேளையில் அவருக்கு வைத்திய சேவையினை அர்ப்பணிப்புடன் வழங்கிய பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள் DR.K.சத்தியமூர்த்தி, DR.S.பிரசாத் ஆகியோரது விடுதி வைத்தியர்கள், தாதியர்கள், உதவியாளர்கள் மற்றும் குருதி சுத்திகரிப்புப் பிரிவில் கடமையாற்றும் வைத்தியர்கள், தாதியர்கள், உதவியாளர்கள் அனைவருக்கும் மேலும் யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள் குறிப்பாக Dr.R.சிவசங்கர், DR.T.பிரம்மா, DR.S.வினோஜன், DR.நளாயினி ஆகியோரது விடுதி அனைத்து வைத்தியர்கள், தாதியர்கள், உதவியாளர்கள் அனைவருக்கும் எமது சிரம்தாழ்த்திய நன்றிகள். உங்கள் அர்ப்பணிப்புள்ள சேவையினை என்றும் மறவோம்.

அத்துடன் எங்கள் அன்னையின் மறைவின் போது எங்கள் துயரில் பங்கெடுத்து சகல வழிகளிலும் எமக்கு உதவிய அனைத்து உறவினர்கள், நண்பர்கள் மற்றும் இறுதிக் கிரியையில் பங்கெடுத்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள், இறுதிக் கிரியை நடத்திய அந்தணர்கள், தொலைபேசி வழியிலும் சமூக வலைத்தளங்களிலும், துண்டுப் பிரசுரங்கள், பதாகைகள் மூலமாக இரங்கல் செய்தியைத் தெரிவித்தவர்களுக்கும் இறுதிக்கிரியை நிகழ்வை நேரலையாக்கித் தந்த கல்லறை.com குழுவினருக்கும் நன்றியை தெரிவிப்பதோடு, இடர்காலத்தில் உணவு தந்து ஆறுதலளித்தோருக்கும் எமது குடும்பத்தின் சார்பாக நன்றியை தெரிவித்துக்கொள்வதோடு,

நாளை 30.05.2025 வெள்ளிக்கிழமை மதியம் நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

**தனிப்பட்ட அழைப்பு தவறவிடப்பட்டவர்கள் இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.**

(C-3072)

அத்தாய்,
அல்வாய் கிழக்கு.

இங்ஙனம்,
குடும்பத்தினர்

# அதிகரிக்கும் மாணவர்கள் மீதான வன்கொடுமை – பிரதமர்

(கொழும்பு)

பாடசாலைகளுக்குள் பதிவாகும் மாணவர்கள் மீதான துஷ்பிரயோக சம்பவங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது குறித்து பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்விலேயே பிரதமர் தனது கவலையை வெளியிட்டார்.

அத்துடன் பாடசாலை மாணவர்களுக்கு எதிரான வன்முறைச் செயல்களை எந்தச் சூழ்நிலையிலும் பொறுத்துக்கொள்ளக்கூடாது என்று வலியுறுத்தினார்.

இதுபோன்ற சம்பவங்கள் பதிவாகும் போதெல்லாம் உடனடியாகவும் தீர்க்கமாகவும் நடவடிக்கை எடுக்குமாறு பாடசாலை முதல்வர்களுக்கு அவர் உத்தரவிட்டார்.

மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை உறுதி செய்வதில் பாடசாலை தலைமையின் முக்கிய பங்கையும் அவர் வலியுறுத்தினார்.

(ம-4,7)

## மரண அறிவித்தல்



### துசியந்தன் நிறோசா

மூத்த விநாயகர் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துசியந்தன் நிறோசா அவர்கள் 27.05.2025 செவ்வாய்க்கிழமை அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அவரின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று 29.05.2025 வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் இல. 143/1 மூத்த விநாயகர் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று நல்லடக்கத்திக்காக அளவெட்டி cacm சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(4406)

தகவல் : குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்பகுதியில் ஒலிக்கும் தமிழர்களுக்கு எதிரான குரல்கள்!

## நோர்வே தூதுவருக்கு சுட்டிக்காட்டிய ஆளுநர்



**(யாழ்ப்பாணம்) ........................................**

**அரசாங்கத்தால் வடக்கு மாகாணத்தில் இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்த பாதைகள் விடுவிக்கப்படுதல் மற்றும் காணிகள் விடுவிக்கப்படும்போது தென்பகுதியிலுள்ள சில அரசியல்வாதிகள் அதற்கு எதிராகக் குரல் கொடுக்கும் நிலைமை இப்போதும் காணப்படுவதாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் இலங்கைக்கான நோர்வேயின் பிரதித் தூதுவர் மார்ரைன் அம்டால் பொத்தெமுக்கு சுட்டிக்காட்டினார்.**

வடக்கு மாகாணத்துக்கு பயணம் மேற்கொண்டுள்ள நோர்வேயின் பிரதித் தூதுவர் வடக்கு மாகாண ஆளுநரை, ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினார். அதன் போது மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்துக்கான குடிதண்ணீர் பிரச்சினை தொடர்பில் ஆளுநர் குறிப்பிட்டார். கடல் நீரை சுத்திகரிக்கும் செயற்றிட்டத்தின் ஊடாக குடி தண்ணீர் வழங்கல் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டாலும் அதற்கான செலவு அதிகம் என்பதை சுட்டிக்காட்டிய ஆளுநர் மாற்றுத் திட்டங்கள் தொடர்பில் கூடுதலான கவனம் செலுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

சுற்றுலாத்துறை அபிவிருத்தி யாழ்ப்பாணத்தில் முக்கியமானதாக மாறி வரும் நிலையில் கழிவு நீர் சுத்திகரிப்பு பொறிமுறை இல்லை என்றும் இதன் காரணமாக பல சவால்களை எதிர்கொள்வதாகவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

மேலும், விவசாயம் மற்றும் மீன்பிடி ஆகிய இரண்டு துறைகளினதும் உற்பத்திப் பொருட்கள் அப்படியே ஏற்றுமதி செய்யப்படுகின்றன என்றும் அவற்றை முடிவுப்பொருட்களாக்கி ஏற்றுமதி செய்யப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் இங்கு வலியுறுத்தினார். (நி-8)

# இரவில் ஒளிரவுள்ள பாதசாரி கடவைகள்

(கொழும்பு)

இரவில் பாதசாரி கடவைகளை ஒளிரச் செய்யும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அடையாளம் காணப்பட்ட பாதிக்கப்படக்கூடிய இடங்களில் அமைந்துள்ள பாதசாரி கடவைகளை ஒளிரச் செய்ய முதற்கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் துணை இயக்குநர் ஜெனரல் கே. சந்திரகுமார தெரிவித்துள்ளார்.

இதற்காக சூரிய சக்தி பேனல்கள் பயன்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

இது இரவில் சாலையைக் கடக்கும் பாதசாரிகளை ஓட்டுநர்களுக்கு மேலும் தெரியும்படி செய்யும் என்றும், விபத்து அபாயத்தைக் குறைக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குருநாகல், காலி மற்றும் கொழும்பு மாவட்டங்களில் இது போன்ற 140 பாதசாரி கடவைகள் ஏற்கனவே ஒளிரச் செய்யப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாதசாரி கடவைகளில் ஏற்படும் விபத்துகளால் ஆண்டுதோறும் ஏராளமானோர் உயிரிழப்பதால் இந்த முயற்சி செயற்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# பனைத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

பனை மரத்தின் மகிமையை உலகறியச் செய்வோம் எனும் தொனிப் பொருளில் வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகம் முன்னெடுக்கும் பனைத் திருவிழா (2025) நாளை வெள்ளிக்கிழமை மற்றும் நாளை மறுதினம் சனிக்கிழமை ஆகிய இரு தினங்களும் முற்பகல் 10 மணி முதல் இரவு 8 மணி வரை யாழ்ப்பாணம், முற்றவெளி, பண்ணை சுற்றுவட்டப் பிரதேசத்தில் இடம்பெறவுள்ளதென வட மாகாண சுற்றுலாப் பணியகத் தலைவர் அ. பத்திநாதன் தெரிவித்துள்ளார். (நி-3-8)

# சீரற்ற காலநிலையால் 1520 பேர் பாதிப்பு



(கொழும்பு)

நாடு முழுவதும் கடந்த சில நாட்களாக நிலவி வரும் சீரற்ற காலநிலை காரணமாக எட்டு மாவட்டங்களில் 400ற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

புத்தளம், யாழ்ப்பாணம், அம்பாந்தோட்டை, காலி, களுத்துறை, கொழும்பு, இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களில் மொத்தம் 1,520 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக பேரிடர் மேலாண்மை மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் எட்டு பேர் காயமடைந்துள்ளதாகவும் 325 வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும் மேலும் தெரிவித்துள்ளது. (நி)

# யாழ்.போதனாவிற்கு 208 சிங்கள தாதியர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு புதிதாக இரண்டு தாதிய பரிபாலர்களும் 268 தாதிய உத்தியோகத்தர்களும் நேற்று புதன்கிழமை நியமனம் பெற்று வருகை தந்துள்ளார்கள்.

யாழ் போதனா வைத்தியசாலைக்கு நியமனம் பெற்று வந்த 268 புதிய தாதிய உத்தியோகத்தர்களை வரவேற்கும் நிகழ்வு தாதியர் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்றது.

தாதிய பரிபாலர்களுக்கான வெற்றிடங்கள் ஐந்து இருக்கின்ற போதும் இரண்டு நியமனங்களே வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே சேவையில் உள்ள தாதிய உத்தியோகத்தர்களில் 168 பேர் வருடாந்த இடமாற்றம் பெற்று செல்லவுள்ள நிலையில், புதிதாக வருகை தந்தவர்களில் 60 பேர் தமிழ் மொழி சார்ந்தவர்களாகவும் ஏனைய அனைவரும் சகோதர மொழி பேசுபவர்களாகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது. (நி-33)

## பல்கலைக்கழக அனுமதிக்கான

# விண்ணப்பம் கோரல் நாளையுடன் நிறைவு

(கொழும்பு)

2024ஆம் ஆண்டு கல்வி பொது தராதர உயர்தரப்பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதன்படி 2024ஆம் ஆண்டு க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களை 2024-2025 ஆம் கல்வியாண்டுக்காக தேசிய பல்கலைக்கழங்களில் உள்வாங்குவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

2024 ஆம் ஆண்டு உயர் தரப் பரீட்சை பெறுபேறுகள் அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்கள் 2025ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆம் திகதி நள்ளிரவுடன் நிறைவடையும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. ஒவ்வொரு மாணவரும் தங்கள் விண்ணப்பத்தை இணையவழியில் சமர்ப்பிக்குமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.


விண்ணப்பதாரர்கள் www.ugc.ac.lk என்ற உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்குள் பிரவேசித்து தங்களது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம் எனவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (நி-8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## இறுதிப்போட்டிக்குள் நுழைவது யார் ?

# பெங்களூரு - பஞ்சாப் இன்று பலப்பரீட்சை





நடப்பு ஐ.பி.எல். தொடரில் லீக் சுற்று ஆட்டங்கள் முடிவடைந்தன. லீக் போட்டிகளின் முடிவில் பிளே ஆப் சுற்றுக்கு பஞ்சாப், பெங்களூரு, குஜராத், மும்பை ஆகிய அணிகள் தகுதி பெற்றன.

சென்னை, ராஜஸ்தான், ஐதராபாத், கொல்கத்தா, லக்னோ, டெல்லி ஆகிய அணிகள் தொடரில் இருந்து வெளியேறின.

இந்நிலையில், புள்ளிப்பட்டியலில் முதலிடம் பிடித்த பஞ்சாப், 2ஆவது இடம் பிடித்த ஆர்சிபி அணியுடன் குவாலிபையர் 1 சுற்றில் இன்று மோதுகிறது.

புள்ளிப்பட்டியலில் 3 ஆம் இடம் பிடித்த குஜராத், 4 ஆம் இடம்பிடித்த மும்பை அணியுடன் எலிமினேட்டர் போட்டியில் நாளை வெள்ளிக் கிழமை மோதுகிறது.

குவாலிபையர் 1 மற்றும் எலிமினேட்டர் போட்டிகள் பஞ்சாப்பின் முல்லன்பூரில் நடைபெறுகிறது. குவாலிபையர்2 சுற்று மற்றும் இறுதிப்போட்டி அகமதாபாத்தில் நடைபெறுகிறது.

முல்லான்பூரில் நடைபெற உள்ள எலிமினேட்டர் போட்டியில் வெற்றி பெறும் அணி குவாலிபையர் 1இல் தோல்வி அடையும் அணியுடன் ஜ"ன் 1 ஆம் திகதி விளையாடும் (நி-3)

# வளர்ந்து வரும் அணிக்கு தலைவராகிறார் தனஞ்சய



மேற்கிந்தியத் தீவுகளின் வளர்ந்து வரும் வீரர்கள் அணிக்கு எதிரான கிரிக்கெட் போட்டிகளில் விளையாடவுள்ள இலங்கையின் வளர்ந்து வரும் வீரர்கள் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

சகலதுறை ஆட்டக்காரர் தனஞ்சய லக்ஷானை தலைவராகக் கொண்ட இந்தக் குழாத்தில் 18 வீரர்கள் பெயரிடப்பட்டுள்ளனர்.

மூன்று சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடியுள்ள 26 வயதான தனஞ்சய லக்ஷான் உள்ளூர் முதல் தர கிரிக்கெட் போட்டிகளில் சகல துறைகளிலும் பிரகாசித்துள்ளார்.

இலங்கையின் வளர்ந்து வரும் வீரர்கள் அணி மேற்கிந்தியத் தீவுகளில் 2 நான்கு நாள் கிரிக்கெட். போட்டிகளிலும் 3 ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளிலும் விளையாடவுள்ளது.(நி-3)

# ஜூலை மாத இறுதியில் லங்கா பிரீமியர் லீக்



லங்கா பிரீமியர் லீக் தொடரின் ஆறாவது பருவகால போட்டிகளை ஜ"லை மாத இறுதியில் நடத்துவதற்கு இலங்கை கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளது.

ஜ"லை மாத இறுதியில் இந்த தொடரை நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருவதாக தொடரின் பணிப்பாளர் சமந்த தொடாங்வெல தெரிவித்துள்ளார். இந்த தடவையும் தொடரில் ஐந்து அணிகள் விளையாடவுள்ளதுடன், ஆறாவது அணியை இணைத்துக் கொள்வதற்கான ஏற்பாடுகளும் இடம்பெற்றுவருவதாக சுட்டிக்காட்டினார்.

அத்துடன் இம்முறையும் தொடர் கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானம், தம்புள்ளை மற்றும் கண்டி பல்லேகலை மைதானங்களில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுவடுதுடன். லங்கா பிரீமியர் லீக் தொடருக்கான உத்தியோக பூர்வ போட்டி அட்டவணை விரைவில் வெளியிடப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (நி-3)

# ரிஷப்பண்டிற்கு அபராதம் விதிப்பு




2025 இந்தியன் பிரீமியர் லீக் தொடரில் ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூரு அணிக்கு எதிராக நேற்று முன்தினம்நடைபெற்ற போட்டியில் லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணி மெதுவாக ஓவர் பரிமாற்றம் மேற்கொண்டதற்காக அணியின் தலைவர் ரிஷப்பண்டிற்கு 30 இலட்சம் இந்திய ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இது இந்த சீசனில் லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணி, மூன்றாவது முறையாக மெதுவாக ஓவர் பரிமாற்றங்களை மேற்கொண்ட சந்தர்ப்பமாகும். இதன் விளைவாக ரிஷப் பண்டிற்கு குறிப்பிடத்தக்க அபராதம் விதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரத்தில், நேற்றைய போட்டியில் பங்கெடுத்த அணியின் ஏனைய வீரர்களுக்கு 12 இலட்சம் இந்திய ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. இது அவர்களின் போட்டிக் கட்டணத்தில் 50 சதவீதம் ஆகும்.(நி-3)

## இன்றைய ஆட்டங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக வங்கியின் தூதுக்குழுவினர்
## கிளிநொச்சி மாவட்டச் செயலகத்திற்கு விஜயம்



(கண்டாவளை)

உலக வங்கியின் இலங்கை நாட்டுக்கான செயற்பாட்டு முகாமையாளர் அபிட் கலி, செயற்றிட்ட தலைவர் காயத்திரி சிங் உள்ளிட்ட தூதுக்குழுவினர் நேற்றைய தினம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தனர்.

தொடர்ந்து, கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரனின் தலைமையில் மாவட்டத்தின் அபிவிருத்தி வாய்ப்புகள் தொடர்பான கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தனர்.

குறித்த கலந்துரையாடல் அறிவியல் நகர் - உப நகர அபிவிருத்தித் திட்டம், பரந்தன் கைத்தொழில் ஊக்குவிப்பு வலய அபிவிருத்தி, கிளிநொச்சி நீர் வழங்கல் திட்ட மேம்பாடு, கௌதாரி முனை சுற்றுலா மையத்துக்கான வீதி அபிவிருத்தி ஆகிய விடயங்களில் உலக வங்கியின் முதலீட்டைப் பெற்றுக்கொள்வதற்கான ஆரம்ப கட்டமாக இது இவ்வாறு நடைபெற்றது.

அத்துடன் துறைசார்ந்து காணப்படும் அபிவிருத்தி தேவைப்பாடுகள், தடைகள், அபிவிருத்திக்கான வாய்ப்புக்கள் மற்றும் சாத்தியப்பாடுகள் தொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் துறைசார்ந்த திணைக்கள அதிகாரிகளிடம் கேட்டறிந்து கொண்டனர்.

மேலும் உலக வங்கி வடக்கு கிழக்கு மாகாணங்களில் "அபிவிருத்திக்கான கொத்தணி" எனும் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இவை உள்ளடக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக் கலந்துரையாடலில் உலக வங்கியின் அதிகாரிகள், மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளரும் பதில் திட்டமிடல் பணிப்பாளர், வட மாகாண முதலீட்டுச் சபையின் மாகாண பணிப்பாளர், மாவட்ட செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர், கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர், வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் பொறியியலாளர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (8-315-316)

# அதிகரிக்கும் வாழ்க்கை செலவு
## இலங்கை மத்திய வங்கி தெரிவிப்பு

(கொழும்பு)

**2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, கடந்த ஆண்டு இந்த நாட்டில் தனிநபர்களின் வாழ்க்கைச் செலவு இரு மடங்காக அதிகரித்துள்ளது என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.**

இருப்பினும், 2023 உடன் ஒப்பிடும்போது 2024 ஆம் ஆண்டில் வாழ்க்கைச் செலவு மிகக் குறைந்த அளவில் அதிகரித்துள்ளது என்று மத்திய வங்கியின் உதவி ஆளுநர் கலாநிதி சந்திரநாத் அமரசேகர தெரிவித்தார்.

இலங்கை மத்திய வங்கியில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது குறைந்த பணவீக்கத்தால் மக்கள் தற்போது பயனடைந்து வந்தாலும், 2021 உடன் ஒப்பிடும்போது நாட்டு மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகமாக உள்ளது என்றும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார். (நி)

# துயர் பகிர்கின்றோம்



யாழ். இந்தியத் துணைத் தூதரக அலுவலரும் எமது நீண்டகால நண்பருமாகிய

**பிரம்மஸ்ரீ.சச்சிதானந்தக்குருக்கள் பிரபாகரசர்மா**

அவர்களின் திடீர் மறைவு எமக்கு பேரதிர்ச்சியாகியுள்ளது. அன்னாரின் இழப்பினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல தில்லைகூத்தன் திருவடிகளை இறைஞ்சுவோமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-3066)

ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பு நிலையம்
303 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். 021 222 5392

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் பழைய மாணவர்களான **சு.விக்கினேஸ்வரன், சு.சுபாஸ்கரன், சு.பிரபாஜினி** ஆகியோரின் அன்புத் தாயாரும் எமது பாடசாலையின் அபிவிருத்திக்குழு செயலாளர் **திருமதி. சந்திரிக்கா விக்கினேஸ்வரன்** அவர்களின் மாமியாருமான

அமரர். **சுந்தரம் சறோஜினிதேவி**

அவர்களின் மறைவிற்கு எமது கண்ணீர் அஞ்சலிகளை தெரிவிப்பதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(சி-3064)

**பழைய மாணவர்கள் யா/ கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்.**

# இராசிபலன்

29.05.2025
வைகாசி 15, வியாழக்கிழமை
திருதியை பின்னிரவு 3.34 மணிவரை

திருவாதிரை பின்னிரவு 2.45 மணிவரை
சுபநேரம் 7.22-8.52 மணிவரை
இராகுகாலம் 1.22-2.52 மணிவரை

சந்திராஷ்டமம்- அனுசம்

வளவன்

**மேஷம்** — ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள், காரிய அனுகூலமுண்டு.

**ரிஷபம்** — புதிய முயற்சியொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், ஆனந்தமான நாள், போசன சுகமுண்டு.

**மிதுனம்** — கௌரவம் மிக்கவர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், போசன சுகமுண்டு, வழிபாட்டால் சந்தோசம் காண வேண்டிய நாள்.

**கடகம்** — பணப்புழக்கம் அதிகமானாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், அன்றாட பணிகள் நன்றாக நடைபெற இறைவனைப் பிரார்த்திப்பீர்கள்.

**சிம்மம்** — தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், குடும்பத் தேவைகள் திருப்தி தரும்.

**கன்னி** — செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், திறமைகள் வெளிப்படும் நாள், பிறர் உதவியுண்டு, தூரதேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம்.

**துலாம்** — ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், விடா முயற்சிக்கு வெற்றி கிடைக்கும், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய திட்டங்கள் தீட்டி ஆதாயம் காண முற்படுவீர்கள்.

**விருச்சிகம்** — கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.

**தனுசு** — பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள்.

**மகரம்** — கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், கௌரவமான நாள்.

**கும்பம்** — பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும், தாழ்ந்த சுபாவமுண்டு, போசன சுகமுண்டு.

**மீனம்** — வளர்ச்சிப் பாதைக்கு வித்திட்டவர்களை சந்தித்து மகிழ்வீர்கள், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், உறவினர் வழியில் எதிர்பார்ப்புக்கள் கைகூடும்.

இன்பமோ துன்பமோ வாழத்தான் வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலவச யோகக்கலை பயிற்சி நெறி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகின் ஏற்பாட்டில் இலவச யோகக் கலைப் பயற்சிநெறிகள் (அடிப்படை) புதிய பிரிவு -2025/02 இற்கான வகுப்புக்கள் யா/ நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் எதிர்வரும் 07. 06 2025 தொடக்கம் 3 மாத காலப்பகுதி வரை வார இறுதி நாட்கள் மற்றும் அரச விடுமுறை நாட்களில் நடை பெறவுள்ளன. எமது இளைஞர் விவகார அலகில் விண்ணப் பப்படிவம் பெற்றுப் பூர்த்தி செய்து சமர்ப்பித்து இப் பயிற்சியில் கலந்து கொள்ளலாம்.

அத்துடன் விண்ணப்பப் படிவம் பெற்று பதிவினை மேற் கொள்ளாதவர்களும் பயிற்சியின் ஆரம்ப தினத்தில் 07.06. 2025 அன்று பயிற்சி நடைபெறும் இடத்திற்கு காலை 6 மணிக்கு வருகை தந்து விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுப் பூர்த்தி செய்து வளவாளரிடம் தமது பதிவினை மேற் கொண்டு பயிற்சியில் இணைந்து கொள்ளலாம் என செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் அறிவித்துள்ளார். (நி)

# துன்னாலை பகுதியில் முற்றுகையிடப்பட்ட கசிப்பு உற்பத்தி நிலையம்

(சாவகச்சேரி)

வடமராட்சி-துன்னாலைப் பகுதியில் நீண்ட காலமாக இயங்கிவந்த கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று நேற்று புதன்கிழமை மதுவரித் திணைக்களத்தினரால் முற்று கையிடப்பட்ட நிலையில் பெருமளவான கசிப்பு மற்றும் கோடா ஆகியன மீட்கப் பட்டுள்ளன.

பருத்தித்துறை மற்றும் சங்கானை மதுவரித் திணைக் களத்தினர் இணைந்து முன்னெடுத்த மேற்படி சுற்றி வளைப்பு நடவடிக்கையின் போது 4இலட்சத்து அறுபதாயிரம் மில்லிலீற்றர் கோடா மற்றும் 39ஆயிரம் மில்லிலீற்றர் கசிப்பு ஆகியன மீட்கப் பட்டதுடன்-கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்ட பெருமளவான உபகரணங்களும் மீட் கப்பட்டுள்ளன. இருப்பினும் இதன்போது சந்தேக நபர்கள் தப்பித்துள்ள நிலையில் அவர்களை கைது செய் வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

யாழ் மாவட்ட உதவி மதுவரி ஆணையாளர் மாளவி பத்திரன மற்றும் மதுவரி அத்தியட்சகர் ரணவீர ஆகியோரின் ஆலோசனைகளுக்கு அமைவாக மதுவரிப் பொறுப்பதிகாரி வே.ரஷிகரன் தலைமையிலான குழுவினர் மேற்படி நடவடிக்கையை முன்னெடுத் திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8-30)

# மஹோற்சவம்

(யாழ்ப்பணாம்)

அல்வாய் வடக்கு, பருத்தித் துறை திருவருள்மிகு குருக் கட்டு அரசடி விநாயகர் ஆலய மஹோற்சவம் நாளை மறு தினம் சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற் றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 13 தினங்கள் மஹோற்சவ பிரதமகுரு சிவஸ்ரீ நாராயண சண்முகநாதக் குருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இவ் மஹோற்சவ தினங்களில் எதிர்வரும் ஜூன் மாதம் 7 ஆம் திகதி சனிக்கிழமை திருமஞ்ச உற்சவமும், 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தங்க ரத உற்சவமும், 9 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் அன்று இரவு 8 மணிக்கு சப்பறத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

அத்துடன் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும், 11 ஆம் திகதி புதன் கிழமை காலை 7 மணிக்கு சமுத்திர தீர்த்தத்திருவிழாவும் அன்று இரவு 7 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெற்று 12 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு பூங்காவன உற்சவமும் இடம் பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (3-8)



கல்வி அபிவிருத்திக் குழுமத்தின் இலங்கை மற்றும் லண்டன் கிளையினரின் ஏற்பாட்டில் கடந்த சனிக்கிழமை கொட்டகல- விஸ்ணுபுரத்தில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வாண்மை விருத்திக் கலந்துரையாடலும்- "21ஆம் நூற்றாண்டு முன்பள்ளிச் செல்நெறிகள்" எனும் நூல் வெளியீட்டு வைபவமும் கொட்டகல பிரீடோ முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி நிலையத்தில் இடம்பெறறது. (படம்:- சுபேசன்)

# தொழில்நுட்பவியல் கல்லூரியின் குறுங்கால கற்கைநெறிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் தொழில்நுட்பவியல் கல் லூரியில் பின்வரும் ஆறு மாத குறுங் கால முழுநேரக் கற்கை நெறிகள் யூலை மாதம் ஆரம்பிக் கப்படவுள்ளது.

கணிய அளவை உதவியாளர், மோட்டார்சைக்கிள் ஸ்கூட்டர் பழுது பார்த்தல், கணினி வன்பொருளுக்கான சான்றிதழ், கணினி வலையமைப் பிற்கான சான்றிதழ், தகவல் தொடர் பாடல் தொழில்நுட்பவியலாளர் சான் றிதழ், கைத் தொலைபேசி பழுது பார்த் தல் சான்றிதழ், ஆடை தைத்தல்(ஆண் மற்றும் பெண்) சான்றிதழ், அலு மினியம் பொருத்துநர் சான்றிதழ், மின்னியலாளர்.ஆகியன முற்றிலும் இலவசமான கற்கை நெறிகள் என் பதுடன் மாதாந்தம் நான்காயிரம் ரூபா உதவித் தொகை மற்றும் போக்குவரத்து பருவ கால சீட்டு என்பன வழங்கப்ப டும்.

பயில விரும்புவோர் 15.06. 2025 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர் தொழில்நுட்பவியல் கல்லூரி, யாழ்ப் பாணம் என்னும் முகவரிக்கு விண் ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

மேலதிக விபரங்களுக்கு தொழில் நுட்பக் கல்லூரியுடன் அல்லது 021 221 2403 எனும் தொலைபேசி இலக்கத் தின் ஊடாக தொடர்பு கொள்ளலாம் என பணிப்பாளர் அறிவித்துள்ளார். (நி)



யா/ போக்கட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் முன்னாள் அதிபர் தி.அபராஜிதனின் சேவைநலன் பாராட்டு நிகழ்வு கடந்த சனிக்கிழமை பாடசாலை அதிபர் திருமதி. தர்ஷினி [illegible] தலைமையில் மண்டபத்தில் இடம்பெற்றிருந்தது. (படம்:- சுபேசன்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 300 | 400 | 350 | 400 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 200 | 210 | 200 |
| பச்சைமிளகாய் | 350 | 300 | 300 | 300 | 400 |
| தக்காளி | 800 | 750 | 800 | 600 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 300 | 250 | 200 |
| கோவா | 450 | 500 | 500 | 350 | 450 |
| கரட் | 800 | 750 | 750 | 700 | 800 |
| பூசணி | 160 | 200 | 180 | 170 | 200 |
| புடோல் | 200 | 200 | 200 | 220 | 250 |
| வாழைக்காய் | 100 | 100 | 120 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 100-300 | 250 | 280 | 400 |
| பெரிய வெங்காயம் | 120 | 140 | 120 | 110 | 120 |
| பாகற்காய் | 600 | 700 | 600 | 600 | 900 |
| வெண்டக்காய் | 200 | 150 | 150 | 130 | 300 |
| கருணைக் கிழங்கு | 350 | 330 | 250 | 200 | 400 |
| பயற்றங்காய் | 200 | 250 | 150 | 150 | 200 |
| லீக்ஸ் | 350 | 350 | 300 | 250 | 400 |
| பீற்றூட் | 600 | 600 | 500 | 450 | 600 |
| கறிமிளகாய் | 600 | 800 | 500 | 500 | 800 |
| முருங்கைக்காய் | 800 | 1000 | 800 | 800 | 1000 |
| போஞ்சி | 400 | 400 | 500 | 450 | 500 |
| கத்தரிதம்புள்ள | 250 | 250 | 300 | -- | 380 |
| கீரை - 1 பிடி | 120 | 120-150 | 150 | 100 | 200 |
| தேசிக்காய் | 400 | 250 | 400 | 280 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 260 | 150 | 120-200 | 200-240 |
| இராசவள்ளி | 650 | 600 | 500 | 500 | 700 |
| வெங்காயப்பூ | 800 | 700 | 500 | -- | 800 |
| முள்ளங்கி | 150 | 160 | 200 | 150 | 400 |
| பொன்னாங்காணி | 100 | 60 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | -- | -- | 100 | -- | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவை மீட்க வேண்டும்

## மீண்டும் வலியுறுத்தும் ஸ்டாலின்

(சென்னை)

**தமிழ்நாடு மீனவர்களின் இன்னல்களைப் போக்க கச்சதீவை மீட்பதே ஒரே வழி என தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.**



சூரை மீன்பிடி துறைமுக திறப்பு விழாவில் முதலமைச்சர் மு.க ஸ்டாலின் இதனைத் தெரிவித்துள்ளதாகத் தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த 4 ஆண்டுகளில் இடம்பெற்ற 97 கைது நடவடிக்கைகளில் 185 படகுகளும் 1,383 தமிழக மீனவர்களும் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

மீனவர்களை மீட்க வலியுறுத்தி இந்திய மத்திய அரசுக்கு இதுவரை 76 கடிதங்களை எழுதியுள்ளதாகவும் ஸ்டாலின் குறிப்பிட்டார். (நி)

# போலந்து அமைச்சர் இலங்கை வருகை




(கொழும்பு)

போலந்து நாட்டின் வெளிவிவகார அமைச்சர் ராடோஸ்லாவ் சிகோர்ஸ்கி மூன்று நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகைதந்துள்ளார்.

ராடோஸ்லாவ் சிகோர்ஸ்கி நேற்றுப் புதன்கிழமை காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார். (நி)

# ஆபத்தை விளைவிக்கும் சரும பூச்சுக்கள்

## பொது மக்களுக்கு எச்சரிக்கை



(கொழும்பு)

இலங்கை சந்தையில் கிடைக்கும் பல முக மற்றும் சரும பூச்சுக்களில் ஆபத்தை விளைவிக்கும் அதிகளவு கன உலோகங்கள் இருப்பதாக ஆய்வுகூட பரிசோதனைகளில் தெரியவந்துள்ளதாக, நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

சோதனைக்கு உட்படுத்தப்பட்ட தயாரிப்புகளில் அங்கீகரிக்கப்பட்ட வரம்புகளை மீறி, நுகர்வோருக்குக் கடுமையான உடல்நல அபாயங்களை ஏற்படுத்தும் வகையில் கன உலோகங்கள் உள்ளடங்கியுள்ளதாக, நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.


குறித்த தயாரிப்புகளின் பெயர்கள் மற்றும் அனுமதிக்கப்பட்ட உலோக செறிவுகளைக் காட்டும் அறிக்கையொன்றை நுகர்வோர் விவகார அதிகாரசபை வெளியிட்டுள்ளது.

இந் நிலையில் அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு வரம்புகளை மீறும் முகப் பூச்சுக்கள் மற்றும் சரும பூச்சுகளை வாங்கவோ பயன்படுத்தவோ வேண்டாம் எனப் பொதுமக்களுக்கு எச்சரிகை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்தத் தயாரிப்புகளை விற்பனை செய்யும் விற்பனையாளர்கள் மீது ஏற்கனவே சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், தொடர்ந்தும் இது தொடர்பில் கடுமையான சட்ட அமுலாக்கம் பின்பற்றப்படும் எனவும் நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# இரணைமடுக்குளத்தினை

## பாதுகாக்குமாறு மக்கள் கோரிக்கை



(முறிகண்டி)

கிளிநொச்சி இரணை மடுக்குளமானது அதிகளவான மண்ணகழ்வு இடம்பெறுவதனால் குளத்தின் கீழ்ப் பகுதியில் உள்ள வளங்கள் அழிவடைந்து வருவதுடன், குளத்திற்கு ஆபத்தாகவும் மாறி வருகின்றது.

உள்ளூர் மண் கொள்ளையர்களால் மண் கபளீகரம் செய்யப்படுகிறது.

இதனைக் கட்டுப்படுத்த முடியாமல் உள்ளதாக மக்கள் கவலை வெளியிடுகின்றனர்.

குளத்தின் கீழ்ப் பகுதியில் பாரிய சுரண்டல் இடம்பெறும் நிலையில் உரிய அதிகாரிகள் இதனைக் கட்டுப்படுத்தி குளத்தினையும், சுற்றுச்சூழலையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (8-100)


**பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ. சங்கம்-பளை கிளை பொதுச்சபைக்கு சமூகமளித்து வாக்களிக்கத் தகுதியுடைய அங்கத்தவர் பட்டியல் தொடர்பானது**

பச்சிலைப்பள்ளி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர் பட்டியலில் இருந்து 31.03.2025ஆம் திகதியில் உள்ளவாறாக கிளை பொதுச்சபைக்கு சமூகமளித்து வாக்களிக்கத் தகுதியுடைய அங்கத்தவர் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு 28.05.2025 திகதி தொடக்கம் 11.06.2025 ஆம் திகதி வரை சங்கத்தின் தலைமைக் காரியாலயத்திலும் தற்போது இயங்கும் கிளை நிலையங்களிலும் இயங்காத கிளை நிலையங்களின் பட்டியல்கள் அந்தந்த கிராம சேவையாளர் அலுவலகங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இந்த பட்டியல்களில் உள்ள பெயர் முகவரியில் வேறுபாடுகள் இருப்பின் அல்லது பெயர் தவற விடப்பட்டிருப்பின் அல்லது ஆட்சேபனைகள் ஏதுமிருப்பின் சங்கச் செயலாளரிடம் எழுத்து மூலம் 12.06.2025 ஆம் திகதிக்கு முன் தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(சி-3067)

செயலாளர்,
பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்கம், பளை.



யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்

**பாராட்டி வாழ்த்துகிறோம்**

எமது பாடசாலையில் உயரிய சேவையாற்றிய

திருமதி

**விஜயாலயன் துஜீபா**

கல்வியியலாளராக பதவி உயர்வு பெற்றதையிட்டு பாடசாலை சமூகமாகிய நாம் பெருமை கொள்வதுடன் அவருக்கு எமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதுடன் அவர் மென்மேலும் வளர்ந்து கல்வி சமூகத்திற்கு சேவையாற்ற வேண்டும் என வாழ்த்துகின்றோம்.



Best wishes!


(4403)

வாழ்த்துவோர்– அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள் (யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## எலான் மஸ்க்கின் ஸ்டார்ஷிப் ரொக்கெட் இந்திய பெருங்கடலில் வீழ்ந்து விபத்து



(டில்லி)
ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்தின் ஸ்டார்ஷிப் ரொக்கெட்டின் ஒன்பதாவது முயற்சியும் தோல்வியடைந்துள்ளது.

பிரபல தொழிலதிபரும் Tesla மற்றும் Space X நிறுவனங்களின் தலைவருமான எலோன் மஸ்க் தனது ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் ஊடாக விண்வெளி சார்ந்த பல வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார்.


அந்தவகையில் அமெரிக்காவின் டெக்சாஸில் இருந்து நேற்று முன்தினம் விண்ணில் ஏவப்பட்ட ஸ்டார்ஷிப் ரொக்கெட்டானது விண்ணில் ஏவப்பட்டு 30 நிமிடங்களுக்குள் நுழைவுத் தொடர்பு துண்டிக்கப்பட்டு இந்தியப் பெருங்கடலில் விழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் எரிபொருள் கசிவே இத்தோல்விக்கு முக்கிய காரணமாகும் என ஸ்பேஸ் எக்ஸ் செய்தித்துறை அதிகாரி டான் ஹவுட் உறுதிப்படுத்தியுள்ளார்.

இதேபோன்று, கடந்த ஜனவரி மாதத்தில் நடைபெற்ற ஏழாவது முயற்சி மற்றும் மார்ச் 6 ஆம் திகதி நடைபெற்ற எட்டாவது முயற்சிகளும் வெற்றியடையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சியான இத்தகைய தோல்விகள், ஸ்பேஸ்எக்ஸின் பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்தும் என்றும், எதிர்கால விண்வெளி பயணங்களை துல்லியமாக திட்டமிட உதவும் என்றும் விண்வெளி நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)


## ஹைப்பர்சோனிக் ஏவுகணை பரிசோதனைக்கு தயாராகும் இந்தியா



(டில்லி)
இந்தியாவின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஹைப்பர்சோனிக் ஏவுகணை ஒன்றைச் சோதிக்க தயாராகி வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

ஹைப்பர்சோனிக் ஏவுகணைகள் பொதுவாக ஒலியின் வேகத்தை விட ஐந்து மடங்கு வேகமாக அல்லது அதற்கும் அதிகமான வேகத்தில் பயணிக்கும் திறன் கொண்டவையாகும்.

அந்தவகையில் உலகின் வேகமான மற்றும் மிகவும் சக்திவாய்ந்த ஆயுதங்களில் ஒன்றாக இது அடையாளப்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-8)



## தனி நடனத்தில்
## உலக சம்பியன் போட்டிக்கு தெரிவான ஈழத்துப் பெண்




(ஜெனீவா)
தனி நடனப்போட்டியில் ஈழத்துப் பெண் மனுஷா சுவிஸிலிருந்து உலக சம்பியன் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பிரித்தானியாவில் வருகின்ற ஜூலை மாதம் 80 நாடுகளிலிருந்து 1300 போட்டியாளர்கள் சொலத்தூனில் நடைபெற்ற தெரிவுப் போட்டியில் பங்கேற்றனர்.

இதில் மேற்பிரிவில் 86.7 என்கிற அதியுயர் புள்ளிகளைப் பெற்றுள்ளார். மனுஷா மக்கஎன்பன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். உலக நடன வலையமைப்பு நடத்திய போட்டியின் உலக சம்பியனுக்குரிய இறுதி போட்டிகள் பிரித்தானியாவில் நடைபெறவுள்ளன. (நி-8)

## 20 லட்சம் மக்களை அழிப்பதில் எந்த நியாயமும் இல்லை

### நெதன்யாகு முகத்திரையை கிழித்த இஸ்ரேல் முன்னாள் பிரதமர்



(ஜெருசலேம்)
காசா பகுதியில் இஸ்ரேல் போர்க்குற்றங்களைச் செய்து வருவதாக இஸ்ரேலின் முன்னாள் பிரதமர் எஹூட் ஓல்மெர்ட் குற்றம் சாட்டியுள்ளார்.

இஸ்ரேல் செய்தித்தாளான ஹாரெட்ஸில் அவர் எஹூட் ஓல்மெர்ட் பேட்டியில், பெஞ்சமின் நெதன்யாகு தலைமையிலான இஸ்ரேலிய அரசாங்கத்தை அவர் கடுமையாக விமர்சித்துள்ளார். அதில் அவர் தெரிவித்துள்ளதாவது

"இஸ்ரேலுக்கு எதிராக சுமத்தப்பட்ட இனப்படுகொலை மற்றும் போர்க் குற்றக் குற்றச்சாட்டுகளை கடந்த ஒரு வருடமாக நான் பகிரங்கமாக மறுத்து வந்தேன். ஆனால் கடந்த சில வாரங்களாக நடந்து வரும் கொலைகள் மற்றும் பசி பட்டினி எனது பார்வையை மாற்றியுள்ளன.

காசாவில் தற்போது நடப்பது ஒரு அழிவுகரமான போர். சாதாரண மக்கள் கண்மூடித்தனமாக, கட்டுப்பாடுகள் இல்லாமல், கொடூரமான முறையில் கொல்லப்படுகிறார்கள். இதற்கு ஒரு சில வீரர்களின் நடத்தை காரணமல்ல. இது வேண்டுமென்றே, தெரிந்தே, தீங்கிழைக்கும் நோக்கத்துடன், பொறுப்பு இல்லாமல் எடுக்கப்பட்ட அரசாங்கக் கொள்கையின் விளைவாகும். ஆம், இஸ்ரேல் போர்க்குற்றங்களைச் செய்கிறது.


முதலாவது காசாவைப் பட்டினி போடுவது. கொள்கையின் ஒரு பகுதியாக, காசா மக்களுக்கு உணவு மற்றும் மருந்தை நாம் மறுக்கிறோம்.

பொறுப்புக்கூறலைத் தவிர்ப்பதற்காக நெதன்யாகு பதில்களை மறைக்க முயற்சிக்கிறார். இருப்பினும், அவரது ஆதரவாளர்கள் சிலர் வெளிப்படையாக, பெருமையுடன் கூட, ஆம், நாங்கள் காசாவைப் பட்டினி போடுகிறோம் என்று கூறுகிறார்கள்.

காசாவின் சுமார் 20 லட்சம் மக்களை முற்றிலுமாக அழிப்பதில் எந்த தார்மீக அல்லது இராணுவ நியாயமும் இல்லை" என்று ஓல்மெர்ட் தெரிவித்தார். (நி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருப்போடு விளையாடுகிறார் புடின் எச்சரிக்கை விடுக்கும் ட்ரம்ப்!



**(வோஷிங்டன்)**

**ரஷ்ய ஜனாதிபதி புடின் பைத்தியமாகி விட்டார் என்றும், நெருப்போடு விளையாடுகிறார் என்றும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் காட்டமாக தெரிவித்துள்ளார்.**



தனது சமூக ஊடகப் பதிவில் ட்ரம்ப் றியதாவது, "நான் மட்டும் இல்லை பன்றால் ரஷ்யாவிற்கு நிறைய மாசமான விடயங்கள் நடந்திருக்கும் என்பதை விளாடிமிர் புடின் உணரவில்லை. நான் சொல்வது மிகவும் மோச மானது. ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் நெருப் போடு விளையாடுகிறார்" என்று தெரிவித்துள்ளார்.

அண்மையில், பல உக்ரைனிய நகரங்களில் ரஷ்ய விமானப்படை நடத் திய கடுமையான தாக்கு தலில் 13 பேர் கொல்லப் பட்டதை தொடர்ந்து புடின் பைத்தியமாகி விட்டார் என்று ட்ரம்ப் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## சீன இரசாயன ஆலையில் பயங்கர வெடி விபத்து

### 5 பேர் பலி: 6 பேர் மாயம்





(பீஜிங்)

சீனாவில் இரசாயன ஆலையில் ற்பட்ட வெடி விபத்தில் 5 பேர் யிரிழந்தனர். மேலும் 6 பேர் ாயமாகியுள்ளனர்.

கிழக்கு சீனாவின் ஷான்டாங் ாகாணத்தில் உள்ள ஒரு இரசா ன ஆலையில் பயங்கர வெடி பத்து ஏற்பட்டது. இந்தத் தொழிற் ாலையில் 500இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் வேலை செய்து வரு ன்றனர்.

தகவலறிந்து விரைந்து வந்த யணைப்பு, மீட்புக்குழுவினர் ற்றி எரிந்த தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இந்த விபத்தில் 5 பேர் உயிரிழந் தனர். மேலும் 6 பேர் மாயமாகி உள்ளனர்.

அவர்களைத் தேடும் பணி முடக்கிவிடப்பட்டுள்ளது.

17 பேர் பலத்த காய மடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் சிலரது நிலைமை கவ லைக்கிடமாக உள்ளது. இந்த வெடி விபத்திற்கான காரணம் குறித்து அதிகாரிகள் விசா ரணை நடத்தி வருகின்ற னர் (நி-8)

## 51ஆவது மாகாணமாக இணைய வேண்டும் கனடாவை மீண்டும் வம்புக்கு இழுக்கிறார் ட்ரம்ப்

(வோஷிங்டன்)

கனடா அமெரிக்கா வுடன் 51ஆவது மாகாண மாக இணைய வேண் டும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் தெவித் தார்.

ட்ரம்ப், தனது 2024 தேர்தல் பிரசாரம் செய்த போது கனடா அமெரிக் காவுடன் இணைய வேண்டும் என்று தெரி வித்தார்.

ஆனால் அதை கனடா நாட்டு அரசியல் கட்சி யினரும், பொதுமக்களும் ஏற்றுக்கொள்ளவில்லை. ட்ரம்ப் கருத்து தொடர்பாக கனடா அரசு தரப்பிலும் கடும் கண்டனமும் அதி ருப்தியும் தெரிவிக்கப்பட் டது.

ஆனாலும் தன் முயற்சியை கைவிடாத ஜனாதிபதி ட்ரம்ப் தொட ர்ந்து கனடாவை இணைப் பது பற்றி பேசி வருகிறார். இது தொடர்பாக ட்ரூத் சோஷியல் பதிவில் ட்ரம்ப் கூறியிருப்பதாவது: எங் களது அற்புதமான கோல்டன் டோம் அமைப் பின் ஒரு பகுதியாக இருக்க விரும்பும் கனடா விடம், நீங்கள் தனி நாடாக இருக்க விரும்பினால் 61 பில்லியன் டொலர்கள் செலவாகும்.

ஆனால் நீங்கள் எங் கள் நேசத்துக்குரிய 51ஆவது மாகாணமாக மாறினால் பூச்சிய டொலர் கள் செலவாகும் என்று நான் சொன்னேன். கனடா இன்னும் அதிகாரப் பூர்வ மாக மாகாண அந்தஸ்து கோரிக்கைக்கு பதிலளிக்க வில்லை. என ட்ரம்ப் அந்த பதிவில் தெரிவித் தார். (நி-8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு படகுகளிலிருந்து
## பெருமளவு போதைப்பொருள் மீட்பு



(கொழும்பு)

450 கிலோ கிராம் எடையுள்ள ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருட்களுடன் இலங்கை கடற்படை பல நாள் மீன்பிடி இழுவைப் படகுகளை கைப்பற்றியுள்ளது.

தெற்கு கடற்கரையின் தொலைவில் ஆழ்கடலில் நேற்று முன்தினம் மீன்பிடி இழுவைப் படகுகள் கைப்பற்றப்பட்டதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

இலங்கை கடற்படை மற்றும் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியகம் இணைந்து நடத்திய இந்த நடவடிக்கையில் 11 மீனவர்களும் கைது செய்யப்பட்டனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை இலங்கை கடற்படை மற்றும் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியக அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (ரி-8)


# கல்யாணமாலை
## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1987- இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி-பா-42 1/2<br>உயரம்: 6'1"<br>தகைமை/தொழில்: BSc, Software Engineer(Canada)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/15534 | பிறப்பு- 1989-இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி-பா- 10 1/4<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BBA, Assistant Manager (pvt)<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண், விவாகரத்தானவர்<br>தொ.இ: G/15531 |
| பிறப்பு: 1994-இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி-பா-17 3/4<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்-BSc, MA<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: B/15536 | பிறப்பு- 1995-இந்து<br>நட்சத்திரம்- சதயம்<br>கி-பா- 37<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: HNDIT, BIT, Network Designer<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/15532 |
| பிறப்பு: 1993-இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி-பா- 21 3/4<br>7இல் செவ்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: O/L,கடை<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15537 | பிறப்பு-1990-இந்து<br>நட்சத்திரம்-கார்த்திகை<br>12இல் செவ்<br>கி.பா - 44<br>உயரம்- 5'6"<br>தகைமை/தொழில்: BA<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/15533 |
| பிறப்பு: 1984- இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>8இல் செவ்<br>கி-பா- 48<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: A/L, கடை (france)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு( PRஉள்ளவர்)<br>தொ.இ: B/15538 | பிறப்பு-1997- இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா - 28 1/2<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில் - BSc, Teacher<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, Banker<br>தொ.இ: G/15535 |
| பிறப்பு: 2000- இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>7இல் செவ்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: பண்ணைப் பொறுப்பாளர்<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15539 | பிறப்பு- 2000-இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா - 80<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில் -NVQ<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: G/15540 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 382

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## இடத்தின் மகிமை!

பார்த்த சாரதி என்றால் என்ன அர்த்தம்?

பார்த்தனுக்கு சாரதி. அதாவதும் அர்ஜூனனுக்குத் தேர் ஓட்டியவன். அவன் கண்ணன் இது எமக்குத் தெரியும்.

இந்தக் கண்ணன் அர்ஜூனனுக்கு இரண்டாவது பார்த்த சாரதிதான். அப்படி என்றால் "முதல்" பார்த்த சாரதி என்று ஒருவர் உண்டா? உண்டு!

கண்ணனுக்கு முன்னாடியே அர்ஜூனனுக்குத் தேர் ஓட்டிய ஒருவன் உண்டு.

அவன் யார் என்றால் உத்தரகுமாரன். விராட தேசத்து இளவரசன். பஞ்ச பாண்டவர்கள் அஞ்ஞாத வாசம் சென்ற நேரம் .

அவர் விராட நகரத்திலேதான் இருப்பார்கள் என்று துரியோதனன் யூகிக்கிறான். அவர்களை வெளிப்படுத்துவதற்காக சில முயற்சிகளைச் செய்கிறான். தன்னுடைய சேனைகளையெல்லாம் அழைத்துக்கொண்டு போய் அந்த நாட்டிலே உள்ள பசுக்களையெல்லாம் ஓட்டிக்கொண்டு போகின்றான்.

அந்த நேரம் விராடன் வேறு ஒரு திசையிலே போர் செய்வதற்காகச் சென்றிருக்கிறார். அவனுடைய மகன் உத்தரகுமாரன் ரொம்ப பயந்தாங்கொள்ளி. கத்தியைப் பார்த்தாலே பயப்படுபவன் அவன் எங்கே சண்டை போடுவது? இருந்தாலும் வேறு வழியில்லாமல் அப்பா ஒரு பக்கம் போய் விட்டதால். இவன் இன்னொரு போர்முனை செல்ல வேண்டிய இக்கட்டான சூழ்நிலை!

இந்த சமயத்திலே அங்கே இருந்த அர்ஜூனன் இவனுக்கு உதவி செய்ய வருகிறான். எப்படி?

அர்ஜூனன் தன்னுடைய உருவத்தை மாற்றுகிறான். உத்தரகுமாரன் மாதிரி அதாவது பேடி உருவத்திலே இருக்கிற அர்ஜூனன் அவனுக்கு சாரதியாக அமைகிறான். போர்முனைக்குப் போய் சேர்ந்த உடனே உத்தரகுமாரன் தேர் ஓட்டுகிறான் அர்ஜூனன் கௌரவ சேனைகளை விரட்டி அடிக்கிறான், அவர்கள் எல்லோரும் புறமுதுகிட்டு ஓடிப்போகிறார்கள் .

அர்ஜூனன் மறுபடியும் "பேடி" உருவம் எடுத்துக்கொண்டு தேர் ஓட்டிக் கொண்டு வருகின்றான் உத்திரகுமாரன் தேரிலே உட்கார்த்திருக்கின்றான். பார்க்கிறவர்கள் எல்லோரும் உத்தரகுமாரன்தான் கௌரவர் களை முறியடித்துவிட்டான் என்று நினைத்து அவனைப் பாராட்டு கிறார்கள்.

அர்ஜூனனும் தான் சண்டை போட்ட விடயத்தை யாரிடமும் சொல்ல வேண்டாம் அந்த ரகசியம் நமக்குள்ளே இருக்கட்டும் என்று உத்தரகுமாரனிடம் சொல்லி விடுகிறான்.

கத்தியைக் கண்டாலே பயந்து நடுங்குகின்ற உத்தரகுமாரனுக்கு போரிலே ஜெயிக்கும் பேரும் புகழும் எப்படி வந்தது?

அதுதான் அந்த ஸ்தானத்தின் மகிமை என்கிறார். ஒரு ஆன்மீக பேச்சாளர், (ஜெயராம சர்மா) அதாவது இடத்தின் மகிமை! அது எப்படி என்று கேட்டால் அவன் கொஞ்ச நேரம் உட்கார்ந்து தேர் ஓட்டினானே அந்த இடத்தின் மகிமைதான் அவனுக்குப் பெருமையை சேர்த்துக் கொடுத்தது. அது ஆசனத்திற்க்கு உள்ள பெருமை.

பின்னாடி, கிருஷ்ணன் உட்கார்ந்து பெருமைப்படுத்தப் போகின்ற "ஆசனம்" இல்லையா அது? அந்த சாரதி ஸ்தானத்திலே உத்தரகுமாரன் முன்னாடியே உட்கார்ந்தான். அதனாலே அவனுக்கு அத்தனை பெருமை கிடைத்தது. ஒரு நாற்காலிக்கு மதிப்பு ஏற்படுவதே அதிலே உட்கார்பவர்களைப் பொறுத்துத் தானே சார்!

"இதோ இருக்கிறதே இது இன்னார் உட்கார்ந்த நாற்காலி" அப்படி என்று இப்பவும் நாம் சொல்லிக் கொள்கிறோம்! நாம் எல்லாம் ஒரு நாற்காலியிலே உட்கார்ந்தால் அந்த நாற்காலி ஏற்கனவே வாங்கி வைத்திருக்கின்ற பெருமையை காப்பாற்றும் அளவுக்கு அதுலே உட்கார வேண்டும்! அது தான் நமக்கும் நல்லது. நாற்காலிக்கும் நல்லது.

ஒரு ஆள் ஒருஅலுவலகத்திலே புதிதாக வேலைக்குச் சேர்ந்தான். முதல் நாள் போய் அவனுக்கென்ற நாற்காலியிலே உட்காரப் போவதற்கு முன்னால் ஒரு சபதம் எடுத்துக் கொண்டான். "நான் லஞ்சம் வாங்கமாட்டேன்" என்று.

அப்படியென்றால் என் மேலே உட்காராதே!" என்று கத்தியது அந்த நாற்காலி.

"ஏன்?"என்று கேட்டான் இவன்,

"ஏன் என்றால் நானே இந்த அலுவலகத்திற்கு லஞ்சமாக வந்து சேர்ந்த நாற்காலி தான்!" என்றது அந்த நாற்காலி! இது அந்த இடத்தினுடைய மகிமை!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி

## விவசாய ஆராய்ச்சி நிலைய ஊழியர்கள் போராட்டம்!

(தருமபுரம்)

**நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி விவசாய ஆராய்ச்சி நிலைய ஊழியர்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.**



வடமாகாணத்தின் முல்லைத்தீவு மாவட்டத்தை தவிர்ந்த விவசாய திணைக்களத்தின் பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தைச் சேர்ந்த ஒப்பந்த அடிப்படையில் பல வருட காலம் பணிபுரியும் ஊழியர்கள் கிளிநொச்சி இரணைமடு சந்தியிலுள்ள பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்திற்கு முன்பாக நேற்றைய தினம் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இறுதியாக 2014 ஆம் ஆண்டு சில ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்ட போதும் ஏனையவர்களுக்கு இன்றுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை. 2014 ஆம் ஆண்டு நியமனம் வழங்கும் போது சில ஊழியர்கள் 180 நாட்களுக்கு ஓரிரு நாட்கள் குறைவாக காணப்பட்ட ஊழியர்களும் பன்னிரண்டு வருடங்களுக்கு மேலாக நியமனம் இன்றி இருப்பதாகவும் தெரிவித்தனர்.

தமக்கான நிரந்தர நியமனத்தை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்து குறித்த கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். இதன் போது "வேண்டும் வேண்டும் நியமனம் வேண்டும்", அரசே! கண்ணோக்கி பாரும்", "மழையிலும் நாங்கள் வெயிலிலும் நாங்கள்" போன்ற கோரிக்கைகள் அடங்கிய பதாதைகளுடன் குறித்த போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (8-315-316)

# விதை வெங்காயம் வழங்கும் நிகழ்வு

(கிளிநொச்சி)

வடமாகாண விவசாய திணைக்களத்தின் விவசாய விரிவாக்கல் திட்டத்தின் கீழ் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 41 விவசாயிகளுக்கு நேற்றைய தினம் விதை வெங்காயம் வழங்கி வைக்கப்பட்டது.

விதை வெங்காயம் வழங்கும் நிகழ்வு கிளிநொச்சி பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தில் கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் வி.சோதிலட்சுமி தலைமையில் நடைபெற்றது.

வெங்காயச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்கில் 41 விவசாயிகளுக்கு 120 கிலோக்கிராம் சின்ன வெங்காயம் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி விவசாய திணைக்கள உத்தியோகத்தர்கள் விவசாயிகள் கலந்து கொண்டனர். (8)

# பரிசில் வழங்கும் நிகழ்வு



(கண்டாவளை)

சர்வதேச கண்ணிவெடிகள் தினம் ஏப்ரல் 4 ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

இதன் ஓர் அங்கமாக தேசிய கண்ணிவெடி செயற்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில், பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட கண்ணி வெடி விழிப்புணர்வு சித்திரப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட செயலக திறன் விருத்தி நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நகர அபிவிருத்தி நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் M.M Nayeemudeen கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்கள் மற்றும் பரிசில்களை வழங்கி வைத்தார்.

குறித்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டத்தில் கண்ணி வெடியகற்றலில் ஈடுபடும் நிறுவனப்பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (8-315)

# மன்னாரில் 5000 பயனாளிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம்



(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் பெரும்பாலான கிராமங்களிலும் காணப்படும் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்குமாறு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்று இடம்பெற்ற மன்னார் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில் தேக்கம் அணைக்கட்டிலிருந்து மேலதிகமாக வெளியேறும் நீரைப் பயன்படுத்தி 5000 பயனாளிகளுக்கு குடிநீரை வழங்கக்கூடிய, 5.3பில்லியன் பெறுமதியில் குடிநீர்த் திட்டமொன்றை ஆரம்பிப்பது தொடர்பில் மன்னார் மாவட்ட செயலாளரால் திட்டமொன்று முன்மொழியப்பட்டது.

மாவட்ட அபிவிருத்திக் குழுவால் குறித்த குடிநீர் திட்டத்திற்கு அனுமதியளிக்கப்பட்டிருந்தது.

இதுதொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தின் பல இடங்களிலும் குடிநீர்ப் பிரச்சினை காணப்படுகின்றது. மக்கள் குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் பலத்த இடர்பாடுகளை எதிர்நோக்குகின்றனர்.

குறிப்பாக ஏற்கனவே கடந்த மன்னார் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலும், அச்சங்குளம் கிராமத்தில் குடிநீர்ப் பிரச்சினையால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் பேசியிருந்தேன். இந்த வருட இறுதிப் பகுதிக்குள் அச்சங்குளம் கிராம மக்களின் குடிநீர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் எனவும் தெரிவித்தார். (8)

# கடல்நீர் கிராமங்களுக்குள் உட்புகும் அபாயம்!

## ரவிகரன் எம்.பி நேரடி விஜயம்

(மன்னார்)

மன்னார் - நானாட்டான் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட, வங்காலைப் பகுதியிலுள்ள கடலரிப்பு நிலைமைகளை அப்பகுதி மக்களின் அழைப்பின் பேரில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கடந்த செவ்வாய்க்கிழமை நேரடியாகச்சென்று பார்வையிட்டார்.

இந்நிலையில் அப்பகுதி மக்களின் இடர்பாடுகளை கேட்டறிந்து கொண்டதுடன் கடலரிப்பைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில் தம்மால் கவனஞ் செலுத்தப்படுமெனவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில், குறிப்பாக வங்காலை பகுதியில் கடலரிப்பு நிலைமைகள் அதிகரித்துள்ளதால் கடல்நீர் கடற்கரையோர கிராமங்களுக்குள் உட்புகும் நிலை காணப்படுகின்றது. இதனால் அப்பகுதி மக்கள் பலத்த இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

இந்நிலையிலேயே இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரனுக்கு இவ்விடயம் அப்பகுதி மக்களால் தெரியப்படுத்தப்பட்டதையடுத்து, அவர் இவ்வாறு நிலைமைகளை நேரடியாகச்சென்று பார்வையிட்டதுடன், மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் கேட்டறிந்துகொண்டார்.

ஏற்கனவே, கடலரிப்பைத் தடுப்பதற்கு வங்காலைப் பகுதியில் தடுப்பணை அமைக்கப்பட்டதைப்போன்று, ஆறு இடங்களில் தடுப்பணைகள் அமைக்கப்பட வேண்டுமெனவும், இதன்மூலமே கடல் நீர் கிராமத்திற்குள் உட்புகுவதைத் தடுக்கமுடிவதுடன், அதனால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களையும் தடுக்கமுடியுமென மக்களால் இதன்போது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

கடலரிப்பால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர், இந்த சிக்கல் நிலைமை தொடர்பில் உரிய தரப்பினரது கவனத்திற்கு கொண்டு சென்று, தடுப்பணை அமைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்படுமென தெரிவித்திருந்தார். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின்

பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர்

785





அங்கே ஒரு அறையில் தூசு தட்டிக் கொண்டிருந்தவன் எங்கள் அரண்மனை வேலைக்காரன்தான். மற்றவர்களை அவன்தான் இட்டு வந்திருக்க வேண்டும். அவர்களும் எனக்குத் தெரிந்தவர்கள் என்றே தோன்றுகிறது. அவர்கள் எதற்காக இங்கே வந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்டு வருகிறேன். கதவுக்கு அருகில் நிற்க வேண்டாம். அதோ அந்த மரக்களஞ்சியத்துக்கு அருகில் போய் சிறிது மறைந்து நில்லுங்கள்!"

இவ்விதம் சொல்லிக் கொண்டே மணிமேகலை வேட்டை அறைக்குப் போகும் வாசற் பக்கம் சென்று அதன் கதவைத் திறக்க முயன்றாள். வந்தியத்தேவன் அவசரமாக நடந்து மரக்களஞ்சியத்தின் அருகில் சென்று மறைந்து நின்றான். மரக்களஞ்சியத்தின் கதவுகள் திறந்திருந்தன. அதற்குள்ளே தற்செயலாகப் பார்த்தான். அது தானியம் கொட்டும் களஞ்சியம் அல்லவென்று தெரிந்தது. அறைக்குள்ளே படிப்படியாக அமைந்திருந்தது. ஒவ்வொரு படியிலும் யாழ், வீணை, மத்தளம், தாளம் முதலிய இசைக் கருவிகள் அடுக்கி வைக்கப் பட்டிருந்தன. மேலே சிறிது அண்ணாந்து பார்த்தான். படிகள் மேற்கூரை வரையில் போவதாகத் தெரிந்தது. இதற்குள் மணிமேகலை வேட்டை மண்டபத்தின் கதவைத் திறந்து கொண்டு உள்ளே பிரவேசித்தாள்.

அவளுடைய தைரியத்தை வந்தியத்தேவன் வியந்தான். அதே சமயத்தில் மணிமேகலைக்கு ஆபத்து ஒன்றும் நேருவதற்கில்லை என்று மனத்தைத் திடப்படுத்திக் கொண்டான்.

இதற்குள் அந்த அறையின் இன்னொரு பக்கத்திலிருந்து கதவு திறந்தது. "அம்மா! அம்மா!" என்று கூவிக் கொண்டே சந்திரமதி உள்ளே வந்தாள்.

வந்தியத்தேவன் திடுக்கிட்டான் அவள் தன்னைப் பார்த்து விடாமலிருப்பதற்காக இசைக்கருவி களஞ்சியத்துக்குள் நுழைந்தான்.

"அம்மா! அம்மா! தஞ்சாவூர்க்காரர்கள் கோட்டை வாசலில் வந்து விட்டார்களாம். மகாராணி உடனே தங்களை அழைத்து வரச் சொன்னார்கள்!" என்று கத்திக் கொண்டே சுற்றுமுற்றும் பார்த்தாள். அவள் எதிரில் திறந்திருந்த வேட்டை மண்டபக் கதவை நோக்கிப் போனாள்.

கதவின் அருகில் நின்று பார்த்தால் வந்தியத்தேவன் களஞ்சியத்துக்குள் இருப்பது தெரிந்து போய்விடும். ஆகையால் அவன் விரைவாகச் சில படிகள் மேலே ஏறினான். ஒரு வீணையின் மீது அவன் முழங்கால் இடித்து அது சப்தித்தது. வந்தியத்தேவன் பீதி அடைந்து மேலும் சில படிகள் ஏறினான். அவன் தலை களஞ்சியத்தின் மேற் பலகையில் முட்டியது. என்ன விந்தை? அந்த மேற்பலகை வந்தியத்தேவனுடைய மண்டை முட்டியபோது சிறிது மேலே சென்றது. ஏதோ சந்தேகம் தோன்றி வந்தியத்தேவன் அப்பலகையைக் கைகளினால் நெம்பித் தூக்கினான்.


அது நன்றாய் மேலே போனதுடன், திறந்த இடத்தின் மூலமாக வெளிச்சம் வந்தது. தூரத்தில் சலசலவென்று சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. ஒரு பக்கத்தில் வானத்தில் மின்னும் நட்சத்திரங்களும் தெரிந்தன. வந்தியத்தேவனுடைய உள்ளம் உற்சாகத்தினால் துள்ளியது. பலகையை நன்றாக நகர்த்திவிட்டு மேலே ஏறினான். மாளிகையின் மேல் மச்சில் ஒரு பகுதிக்குத் தான் வந்திருப்பதைக் கண்டான்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## அதிபுத்திசாலிகள்



(நேற்றைய தொடர்ச்சி)

அது மிகவும் நல்ல கருத்துதான் என்று எல்லோரும் ஏற்றுக் கொண்டனர். அவ்வாறு அந்த அறிவாளி பக்கத்திலிருந்த மரத்தில் ஏறி ஒரு உறுதியான கிளையைப் பிடித்து தொங்கினான். அவன் காலை மற்றொருவன் பிடித்துத் தொங்கினான். அவன் காலை இன்னொருவன் பிடித்துத் தொங்கினான்.

இப்படியே எல்லோரும் ஒருவர் காலை ஒருவர் பிடித்துத் தொங்கினர். மிகப் பெரிய பாரத்தால் கிளை, எப்போது வேண்டுமானாலும் முறிந்து விடக் கூடிய நிலைக்கு வந்தது. அப்போது அறிவாளி சொன்னான்.

"நண்பர்களே, கிளை இப்போது ஒடிந்து விடும். அதற்கு முன்பு நான் இந்தக் கிளையை இன்னும் கொஞ்சம் பலமாகப் பற்றிக் கொள்கிறேன்!" என்றான்.

கிளையை மேலும் வலுவாகப் பற்றிக் கொள்வதற்காக அவன் கையைச் சற்று அசைத்ததும் அவன் பிடி நழுவியது. எல்லோரும் கீழே விழுந்தனர்.

ஆனால், அந்த மரக் கிளையோ, முறியாமல் அப்படியே இருந்தது. இனி என்ன செய்வது என்று எல்லோரும் ஆலோசித்தனர். அந்தக் கூட்டத்திலிருந்த வேறொரு அறிவாளி இப்படிச் சொன்னான்.

"நண்பர்களே, நாம் இந்த மரத்தின் கீழே தீ மூட்டுவோம். அந்த வெப்பத்தில் கிளை ஒடிந்து கீழே விழுந்துவிடும்!" என்றான்.

எல்லோரும் அது ஒரு சிறந்த கருத்துத்தான் என்று ஏற்றுக் கொண்டனர். அந்த அறிவாளி அவனிடம் இருந்த ஒரே ஒரு தீப் பெட்டியை வெளியே எடுத்தான். ஆனால், அவனுக்கு ஒரு சந்தேகம்.

தீக்குச்சி ஏரியவில்லை என்றால் என்ன செய்வது? அவன் ஒரு தீக்குச்சியை உரசி பற்ற வைத்துப் பார்த்தான்.

அது எரிந்தது. ஆயினும் அடுத்த குச்சி எரியவில்லையென்றால் என்ன செய்வது? அவனுக்கு மீண்டும் சந்தேகம் வந்தது. அடுத்த தீக்குச்சியையும் அவன் பற்ற வைத்துப் பார்த்தான்.

அப்படி தீப்பெட்டியில் இருந்த எல்லா தீக்குச்சியும் தீரும்வரை அவன் உரசி உரசிப் பார்த்தான். கடைசியில் அவன் திருப்தியுடன் சொன்னான்.

"தீக்குச்சிகளெல்லாம் தீர்ந்து விட்டன. ஆயினும் என்ன?

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிக்காக போராடும் போது விடாமுயற்சி என்றவர்கள்; வெற்றி பெற்ற பின் விடாமுயற்சி என்பார்கள். ~ கண்ணதாசன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வாபஸ் பெறப்பட்ட காணி அபகரிப்பு

வட மாகாணத்தில் உரிமை கோரப்படாத 5 ஆயிரத்து 940 ஏக்கர் காணிகளை அரசாங்கம் சுவீகரிக்கும் என்பதாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை அரசாங்கம் வாபஸ் பெற்றமை வரவேற்கப்பட வேண்டிய விடயம்.

இதுவிடயத்தில் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது எதிர்ப்பை பாராளுமன்றத்திலும் வெளியிலும் முன்வைத்தனர். அதன் பயனாக காணி சுவீகரிப்புத் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வாபஸ் பெறப்பட்டுள்ளது.

இங்கு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களின் கருத்தை அரசாங்கம் கவனத்தில் எடுத்து உடனடியாக வர்த்தமானி அறிவித்தலை வாபஸ் பெற்றமை அநுர அரசாங்கத்தின் ஜனநாயகத் தன்மையை எடுத்துக் காட்டுகிறது.

ஆம், காந்தியடிகள் உண்ணாவிரதம் இருந்த போது, அதனை பிரித்தானிய ஆட்சியாளர்கள் பெரிய விடயமாகக் கருதியதாலேயே இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைத்தது.

ஆக, மற்றவர்களின் நியாயபூர்வமான கருத்துக்களை ஏற்றுக் கொள்கின்ற மனநிலை என்பது குறித்துரைக்கப்பட வேண்டியது.

இதை நாம் கூறும்போது, காணி சுவீகரிப்புக்காகக் குரல் கொடுத்த நம் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களின் கனதியான செயற்பாட்டை மழுங்கடிப்பதாக யாரும் நினைத்து விடக்கூடாது.

மாறாக, கடந்த கால ஆட்சியாளர்களிடமும் நம் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வைக்காத கோரிக்கைகள் இல்லையெனலாம்.

ஆனால் அந்த ஆட்சியாளர்கள் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களை ஒரு பொருட்டாகக் கருதியதில்லை.

மாறாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் அரசாங்கம் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு, காணி சுவீகரிப்புத் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை மீளப் பெற்றுள்ளது.

இங்குதான் ஒரு விடயத்தை நாம் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். அதாவது, ஜனாதிபதியாக அநுர குமார திஸாநாயக்க பதவி ஏற்றாலும் கடந்த காலப் பேரினவாத ஆட்சியாளர்களின் வேலைத்திட்டத்தை அமுல்படுத்திய பேரினவாதிகள் இப்போதும் அரசபணியில் இருக்கிறார்கள்.

எனவே அவர்கள் தமிழ் மக்களுக்கு எதிரான வேலைத்திட்டங்களைச் செய்து கொண்டே இருப்பார்கள்.

இவர்களையெல்லாம் இனம் கண்டு அவர்களின் இனவாதத்தை கட்டுப்படுத்துவதென்பது கடினமானது என்பதுடன் அதனை உடனடியாகச் செய்வதும் முடியாத காரியம்.

ஆகவே எல்லா விடயங்களையும் அரச உயரதிகாரிகளும் ஆலோசகர்களும் ஜனாதிபதி அநுரவின் கவனத்துக்குக் கொண்டு வந்த பின்பே அமுல்படுத்துகின்றனர் என்று நாம் எதிர்பார்க்க முடியாது.

ஆகையால் தான் இவ்விடத்தில் நாம் பல தடவைகள் கூறியது; ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவை ஒரு சீரான கால ஒழுங்கில் எம் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சந்திக்க வேண்டும்.

அவ்வாறு சந்திப்பதன்மூலம் சமகால நிலைமைகளை அவரிடம் எடுத்துக்கூற முடியும். இதைச் செய்யாதவரை எங்கள் நிலைமை எதற்கும் போராடுவதாகவே இருக்கும். இஃது எம் இனத்துக்கு அவ்வளவு ஆரோக்கியமானதல்ல.

# நாட்டில் துப்பாக்கிக் கலாசாரம் தலைதூக்க பிமலின் பொறுப்பற்ற செயலே மூலகாரணம்

## அவரைக் கைது செய்ய அரசுக்கு திராணி உண்டா?

### உதய கம்மன்பில கேள்வி

(கொழும்பு)

போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் ஆணையின் பிரகாரம் பரிசோதனைகள் ஏதுமின்றி 323 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டமையே நாட்டில் துப்பாக்கிக் கலாசாரம் தலைதூக்க மூலகாரணம் என பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதயகம்மன்பில குற்றம் சாட்டினார்.

கொழும்பில் கட்சிக் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இது குறித்து மேலும் கருத்துரைத்த அவர்,

பரிசோதனையின்றி விடுவிக்கப்பட்ட 323 கொள்கலன்களுக்கும், மனித படுகொலைகளுக்கும் நேரடித் தொடர்புண்டு என்ற நியாயமான சந்தேகம் எழுகிறது.

பாதாளக் குழுக்களின் துப்பாக்கிச்சூட்டினால் இதுவரையில் 30 இற்கும் அதிகளவானோர் உயிரிழந்துள்ளனர். இந்த இரத்தக்கறை அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் கரங்களில் படிந்துள்ளது. சட்டவிரோத செயலில் ஈடுபட்ட அமைச்சர் பிமல் ரத்நாயக்கவை முடிந்தால் கைது செய்யுங்கள் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு சவால் விடுகிறோம்.

அந்தக் கொள்கலன்களில் இருந்த பொருட்கள் என்னவென்பதை உரிய தரப்பினர் வெளிப்படுத்தவில்லை என்றும் சுங்கத் திணைக்கள சேவை சங்கம் குறிப்பிட்டது.

இந்தக் கொள்கலன்களை விடுவிப்பதற்கு தான் உத்தரவு பிறப்பித்ததாகக் கப்பற்றுறை அமைச்சர் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்டார். பிமல் ரத்நாயக்க கப்பற்றுறை அமைச்சராக இருக்கலாம், ஆனால் சுங்கத்திணைக்களத்துக்கு உத்தரவு பிறப்பிக்கும் அதிகாரம் அவருக்குக் கிடையாது. ஏனெனில் சுங்கத்திணைக்களம் நிதியமைச்சின் விடயதானங்களுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொள்கலன்களில் என்னவிருந்தது என்பதை வெளிப்படுத்த அரசாங்கம் ஏன் இன்றும் பின்வாங்குகிறது. ஏதோவொன்றை மறைக்கிறது. இந்த கொள்கலன்களில் ஆயுதம் மற்றும் ஆயுத இணைப்பு கருவிகள் இருக்கலாம் என்ற பாரியதொரு சந்தேகம் எமக்குக் காணப்படுகிறது.

கடந்த நான்கு மாத காலப்பகுதியில் சமூக கட்டமைப்பில் பாதாளக் குழுக்களின் செயற்பாடுகள் தீவிரமடைந்துள்ளன. பரிசோதனையின்றி விடுவிக்கப்பட்ட 323 கொள்கலன்களுக்கும் மனித படுகொலைகளுக்கும் நேரடித் தொடர்புண்டு என்ற நியாயமான சந்தேகம் எழுகிறது. பாதாளக் குழுக்களின் துப்பாக்கிச் சூட்டினால் இதுவரையில் 30 இற்கும் அதிகளவானோர் உயிரிழந்துள்ளனர். இந்த இரத்தக் கறை அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் கரங்களில் படிந்துள்ளது.

சுங்கத் திணைக்களம் கப்பற்றுறை அமைச்சின் கீழ் உள்ளடங்காது, நிதியமைச்சின் விடயதானத்துக்குள் உள்ளடங்கும் இவ்வாறான நிலையில் 323 கொள்கலன்களை விடுவிப்பதற்கான உத்தரவை தான் வழங்கியதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார். அவ்வாறாயின் அவர் சட்டவிரோத செயலில் ஈடுபட்டுள்ளார். ஆகவே அவரை உடனடியாகக் கைது செய்து விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்றார். (ம-4,7)

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக

## நாடு முழுவதும் மீண்டும் பி.சி.ஆர் பரிசோதனைகள்

(கொழும்பு)

கொவிட் நோயின் புதிய திரிவு இந்தியா உள்ளிட்ட அண்டை நாடுகளில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் நாடளாவிய ரீதியில் பி.சி.ஆர் பரிசோதனைகளை சுகாதார அமைச்சு அதிகரித்துள்ளது.

சுகாதார அமைச்சில் நேற்றிடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் சுகாதார அமைச்சின் செயலாளர், மருத்துவர் அனில் ஜாசிங்க இதனைத் தெரிவித்தார்.

மேலும் காய்ச்சல் காரணமாகப் புதிதாக அனுமதிக்கபடும், சிகிச்சை பெறும் நோயாளிகள் மீதான கண்காணிப்பை அதிகரிக்குமாறும் வைத்தியசாலைகளுக்கு அறிவுறுத்தியுள்ளோம்.

சுகாதார அமைச்சு ஒவ்வொரு நிலைமைகளையும் உன்னிப்பாக அவதானித்து வருகிறது. தக்க தருணத்தில் துரித முடிவுகளை எடுக்க நாம் தயாராகவுள்ளோம் என்றார். (ம-4,7)

## பாதாளக் குழுக்களுடன் அரசியல்வாதிகளுக்கு டீல்

### பெயர்களைக் கட்சித் தலைமைக்கு அனுப்ப முடிவு

(கொழும்பு)

பாதாளக்குழுக்களுடன் தொடர்புடைய அரசியல்வாதிகளின் பெயர் பட்டியல்கள் அவர்களின் அரசியல் தலைவர்களுக்கு அனுப்பப்படும் எனப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புக் குறித்து நடைபெற்ற கலந்துரையாடலின் போதே பிரதிப் பொலிஸ்மா அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

சில கட்சிகளைச் சேர்ந்த அரசியல்வாதிகள் பாதாள உலகத்துடன் தொடர்புகளில் ஈடுபட்டுள்ளதாகப் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால சமீபத்தில் பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-4,7)

## ஊழலற்ற அமைச்சரவையை மாற்றுவது அநாவசியமானது

### அமைச்சர் சுனில் ஹந்துனெத்தி

(கொழும்பு)

எமது அமைச்சரவை ஊழலற்றது. தனிநபர் ஆதிக்கமற்றது. எனவே அமைச்சரவையை மாற்றுவதற்கான அவசியமோ தேவைப்பாடோ தற்போதில்லை என அமைச்சர் சுனில் ஹந்துனெத்தி தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்துத்துரைத்த அவர்,

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் விரைவில் கவிழும் என்ற எதிரணியின் பிரசாரம் நகைச்சுவையானது. அமைச்சரவை மாற்றம் நடக்கவுள்ளதாக வெளியாகும் தகவல்கூட அரசியல் சூழ்ச்சியின் ஓர் அங்கம் தான்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கத்துக்குக் கூட்டுப் பொறுப்புடன் செயற்படும் ஆணையை மக்கள் வழங்கியுள்ளனர். அதற்கமைய நாம் கூட்டுப் பொறுப்புடன் செயற்பட்டு வருகின்றோம்.

தனிநபர் ஆதிக்கம் கிடையாது. அமைச்சரவை மறுசீரமைப்பு இடம்பெறவேண்டுமென்றாலும்கூட அதனையும் கூட்டுப் பொறுப்புடனேயே செய்வோம்.

எனினும் அமைச்சரவை மறுசீரமைப்புக்குரிய தேவைப்பாடு தற்போது எழவில்லை. அமைச்சரவையிலுள்ளவர்களுக்கு எதிராக எவ்வித ஊழல் குற்றச்சாட்டும் இல்லை. இவர்களால் முடியாது என மக்களும் கூறவில்லை.

அப்படியானால் எதற்காக அமைச்சரவையை மாற்ற வேண்டும்? கடந்த காலங்களில் ஊழல்கள் மற்றும் அரசியல் சூழ்ச்சிகளுக்காக அமைச்சரவை மாற்றப்பட்டது. நாம் அவ்வாறான செயலில் ஈடுபட மாட்டோம் என்றார். (ம-4,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சீர்மேவு யாழ்ப்பாணம் கோண்டாவில் ஈழத்து தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி ஆலய ஐம்பதாவது ஆண்டு மஹோற்சவ பெருவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் இடம்பெறவுள்ளது.

இம் மஹோற்சவ தினங்களில் எதிர்வரும் ஜூன் மாதம் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வேட்டைத்திருவிழாவும் அன்று இரவு 8.30 மணிக்கு சப்பறத்திருவிழாவும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு தீர்த்தோற்சவமும் அன்று இரவு 7 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெற்று 11 ஆம் திகதி புதன்கிழமை இரவு 8.30 மணிக்கு பூங்காவன உற்சவமும் இடம்பெறவுள்ளதென ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (3-8)

# பலத்த காற்றினால் வாவிக்குள் தூக்கி வீசப்பட்ட முச்சக்கரவண்டி



(அநுராதபுரம்)

அநுராதபுரத்தில் வீசிய பலத்த காற்று காரணமாக திஸ்ஸ வாவிக்கு அருகில் உள்ள வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டி ஒன்று வாவிக்குள் தூக்கி வீசப்பட்டுள்ளது.

இந்த விபத்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

பிரதேசவாசிகள் மற்றும் பொலிஸ் உயிர்காப்பு பிரிவினர் இணைந்து முச்சக்கர வண்டியை மீட்டு கரைக்கு கொண்டு வந்துள்ளனர். (நி)

# 74 ஆவது பிறந்த தின வாழ்த்து சின்னத்துரைக் குருக்கள் பிறைசூடிக்குரு (சோழியூரான்)

இன்று 29.05.2025 இல் 74 ஆவது அகவையில் காலடி வைக்கும் ஓய்வு பெற்ற ஆசிரியரும் ஆன்மிக வாதியும் சந்ததிப் பூசகருமான சோழியூரான் பிறைசூடிக் குரு ஐயா அவர்கள் தனது 34 ஆவது ஆண்டுகள் ஆன்மிகப் போராட்டப் பாதையிலே சென்று கொண்டிருக்கும் இவ் வேளையிலே...

ஈசுர விநாயகர் என்பதன் அர்த்தம் சிவனும் விநாயகரும் சேர்ந்து அருள் பாலிப்பது என்பதாகும். அதற்கு அமைவாக சோழிய புரத்திலே சோழேச்சரர் என்னும் கோயிலை 29.06.2000 இல் ஐயா அமைந்துள்ளார். அங்கு சிவன் எழுந்தருளியுள்ளார். 8 படியேறி பூஜை செய்ய வேண்டும் ஈசுர விநாயகரின் ஆலயத்திற்கு நேரே கிழக்குப் பக்கமாக சிவன் எழுந்தருளி இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்த வண்ணம் அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றனர்.

கடுகு சிறிது என்றாலும் காரம் பெரியது அது போல இக் கோயில் அமைந்த பின்னர் தான் எங்களுக்கு ஈசுர விநாயகரின் பரிபூரண அனுக்கிரகம் கிடைத்தது என்பதை இன்றைய ஐயாவின் பிறந்த நன்நாளிலே கூறி வைக்க விரும்புகின்றோம் அத்துடன் சோழியபுரம் வர வேற்கின்றது என்பதற்கு ஓர் அலங்கார வளைவு (05.05.1982) அமைத்து தனது விருப்பத்தை நிறைவேற்றியவர். இதன் சாதனை வட இலங்கையிலே கட்டப்பட்ட முதலாவது வரலாற்றுச் சிறப்பு மிக்க அலங்கார வளைவு என்பதாகும். மேலும் ஐயாவைப் பற்றிய சில தகவல்கள்...


இலங்காபுரியில் மத நல்லிணக்கம், இனநல்லிணக்கம் ஏற்பட வேண்டிய 1976 ஆம் ஆண்டு இரத்தினபுரி சங்கநாயக்கதேரர், அரச பண்டித ஹேன்பிட்ட கெதற ஞானசீல தேரர் உட்பட பேராசிரியர் ஹேன்பிட்டகெதற ஞானாவாச தேரர், மாத்தறை பண்டித வஜ்ஜிரவம்தேரர், யாழ். நாக விகாராதிபதி கடவத்துவே நந்தாறாம தேரர், பேராசிரியர் நல்லை கைலாச நாதக்குருக்கள் மருதானை கப்பித் தாவத்தை பிரம்ம ஸ்ரீ எஸ். சண் முக ரத்தின சர்மா, நல்லை பரமாச்சாரிய சுவாமிகள், நயினை பிரம்மஸ்ரீ கைலாச நாதக்குருக்கள், வணபிதா கிங்ஸ்லி சில்வா, வணபிதா எஸ்.ஜே. ஜெயசீலன் (விரிவுரையாளர் இ. ப.கழகம் யாழ் வளாகம்), வண போதகர் எஸ்.ஜெயநேசன் (கிளிநொச்சி), வணபிதா சியம்பா மௌலவி எம்.கே. எம் ஹீசைன்,ஏ.எல்.எம்.இப்பிறாகிம் யூசுப் மௌலான போன்ற சர்வ மத குருமார்களின் ஆசீர்வாதத்துடனும் வழிகாட்டலுடனும் இலங்கையிலே முதன் முதலாக அனைத்து மதகுருமார்களையும் ஒன்றிணைத்து கொழும்பு மருதானை சுபோதோறாமய விகாரையில் (31.07.1976) தேசிய மதகுருமார் சபையை உருவாக்கிய பிரதம அமைப்பாளர்.

பின்னர் 1977 ஒகஸ்டில் தென்னிலங்கையில் ஏற்பட்ட இனக் கலவரத்தில் அகப்பட்ட தமிழினம் பட்ட துயரங்களையும் வலிகளையும் நேரில் கண்டு பட்டது போதும். தப்பினேன் பிழைத்தேன் என்ற மனோநிலை ஏற்படவே சகல செயற்பாடுகளையும் கைவிட்டு யாழ் வர முடியாமல் ஈசுர விநாயகரின் பெருங் கருணையால் ஒருவாறு வந்து சேர்ந்தது மட்டுமல்ல அவரிடம் தஞ்சம் அடைந்தவர் இது காரணமாக எமது தமிழர் பிரச்சினை மனித சக்தியால் தீர்வு காண முடியாதது என்பதை உணர்ந்ததே தனது ஆசிரிய சேவையை 20 வருடங்களில் இடைநிறுத்திக் கொண்டு ஆன்மீகப் போராட்டத்தைத் தொடங்கியவர்.

1990 ஆம் ஆண்டு ஆயுதப் பேராட்டம் நடந்து கொண்டிருக்கும் வேளையில் மக்கள் அல்லல்பட்டு அவதிப்படுவதைக் கண்ணுற்றார்.

மக்கள் படும் துன்பத்தைப் போக்க சர்வ வல்லமை பொருந்திய ஈசுர விநாயகரை இறைநீதிமன்ற நீதியரசராகக் கொண்டு எமது நாட்டுப் பிரச்சினை சம்பந்தமான மனுவை அவரது தும்பிக்கையிலே நம்பிக்கையோடு சமர்ப்பித்தமை யாவரும் அறிந்ததே அன்றிலிருந்து இன்று வரை 34 ஆண்டுகள் ஆன்மீகப் போராட்டத்தை நடாத்தி சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளார். ஐயா கண்ட தரிசனங்கள் பெரும்பாலும் நிறைவேறியுள்ளது. இன்னும் நிறைவேறாத தரிசனங்கள் விரைவாக நிறைவேறிட ஈசுர விநாயகரைப் பிரார்த்திப்போமாக.

கடந்த 2000 ஆம் ஆண்டு நாட்டின் சமா தானத்திற்கான கட்டமைப்புக்களுடன் கூடிய நீண்ட சமாதான அரணை ஆலயத்தை சுற்றி அமைத்தவர். இச் சமாதான அரணில் சர்வமத குருமார்களும் வருகை தந்து சமாதான தீபம் ஏற்றிய பின்னரே நாட்டில் 2001 ஆம் ஆண்டு யுத்த நிறுத்தம் ஏற்பட வழிவகுத்தது எனலாம். அத்துடன் யாவரும் வியக்கும் வண்ணம் மத நல்லிணக்கக் கோபுரம் இன நல்லிணக்கக் கோபுரம் வட கதிர்காமம் (மலை) போன்றவைகளுடன் பறாளை விநாயகர் பள்ளுப் பாடிய நல்லூர் சின்னத்தம்பிப் புலவருக்கும் சிலையை நிறுவியவர்.



யுத்த காலத்தில் ஐயாவின் சேவை மகத்தானது தமிழர்களுக்கு எல்லாம் போச்சே என்ற நிலையில் 5 இலட்சம் மக்கள் குடா நாட்டைவிட்டு இடம்பெயர்ந்து அகதிகளாகப் புறப்படும் போது பயம் வேண்டாம் பயம் வேண்டாம் ஈசுர விநாயகரே மீண்டும் எம்மை யாழ். குடாவிற்கு அழைத்துச் செல்வார் என்ற ஆறுதற் செய்தியை குடா நாடு பூராகவும் துண்டு பிரசுரமாக வெளியிட்டவர். இதன் மூலம் தமிழ் மக்களின் மனதை ஆற்றுப் படுத்தியவர். தமிழர் அகதி வாழ்க்கையில் சொல்லொணாத் துன்பத்தை அடையும் போது மீண்டும் மீண்டும் "நம்பிக்கை", "ஈசுர விநாயகரின் குரல்" போன்ற துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டவர். இறுதியாக யாழ். செல்வது நிச்சயம் என்ற துண்டுப் பிரசுர வெளியீட்டின் மூலம் ஈசுர விநாயகரே அனைத்து இடம் பெயர்ந்த மக்களையும் யாழில் அழைத்து வந்து குடி அமர்த்தினார் என்பதை எல்லோரும் மறக்க மாட்டீர்கள்

ஐயாவின் கௌரவிப்புக்கள்.

1. "சோழியூரான்" கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலை 1974 இந்து மாமன்றம் செயலர் சிவா மகாலிங்கம் அவர்களால் 2. "சக்திகிரியா வித்தகன்" கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலை 1975 விரிவுரையாளர் திருவாளர் எஸ். தங்கத்துரை அவர்களால்

3. "சிவஞான கலாபமணி" ஆன்மீக விழா நல்லை ஆதீனம் சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியம் பிரம்மஸ்ரீ நித்தியானந்த சிவாச்சாரியார்-2004

4. "ஈசுர விநாயகரின் தொண்டன்" தேர் திருவிழாவன்று பிரசங்க பூஷணம் நடேசன் சிவசண்முகமூர்த்தி அவர்கள் 20.07.2009

5. " குரு மாத்தயா" எல்லாவல மேதானந்த தேரர் தேவஸ்தானத்திற்கு வருகை தந்த போது வாழ்த்து மடல் (10.06.2013)

6. "பாஞ்சசன்னியம்" விருது வலம்புரி வெள்ளி விழாவின் போது ஆறுதிருமுருகன் அவர்கள் (20.12.2024)

இவ்வேளையில் மேன் மேலும் ஐயாவின் பணிகள் தொடர நோயற்ற வாழ்வு வாழ வேண்டும் எனவும் ஐயாவின் இலட்சியம் விரைவாக நிறைவேறிட வேண்டும் எனவும் எங்கள் குல தெய்வம் சர்வ வல்மை பொருந்திய பறாளை ஈசுர விநாயகரை வணங்கி வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர் : மனைவி, பிள்ளைகள், மகள் குடும்பம்.**

(1176)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரத்த வாந்தி...

தந்தையே உயிரிழந்தவராவார்.

மேற்படி நபர் திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணத்தில் உள்ள உறவினர் வீட்டுக்குச் சென்றுவிட்டு மீண்டும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (27) நண்பகல் யாழ்ப்பாணத்தில் இருந்து திருகோணமலை நோக்கி இ.போ.ச. பஸ் வண்டியில் சென்றுள்ளார்.

இதன்போது அவர் இரத்த வாந்தி எடுத்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் அங்கு இரவே உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,4,60)

## தவறிவிழுந்த...

கடந்த 23ஆம் திகதி காலை மட்டக்களப்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த இ.போ.ச பஸ் வண்டியில் மிதி பலகையில் நின்று பயணித்துள்ளார். இதன்போது பயணிகள் ஏறும்போது அவர் இறங்கி ஏறியுள்ளார்.

இந்நிலையில் கரந்தாய்ப் பகுதியில் இறங்கிவிட்டு ஏறும்போது பஸ் வண்டியிலிருந்து தவறி விழுந்து படுகாயம் அடைந்தார்.

இதனையடுத்து கிளி நொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (27) சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,4,60)

## ஒருங்கிணைப்பு...

வுள்ளது.

கடற்றொழில் அமைச்சரும் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் மேற்படி கூட்டம் நடைபெறவுள்ளது. (ம-7,4)

## விசுவமடுவில்...

மாணவர்கள் சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக புதுக்குடியிருப்பு சுகாதார பரிசோதகர்கள் உணவின் மாதிரியை பெற்றுச் சென்றுள்ளனர். இருப்பினும் ஏனைய வகுப்பைச் சேர்ந்த எந்த ஒரு மாணவர்களுக்கும் உணவு ஒவ்வாமை ஏற்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும். (ம-7,4,299,316)

## கரணவாயில்...

உயிரிழப்புத் தொடர்பான மரண விசாரணைகளை கரவெட்டி மரண விசாரணை அதிகாரி வேலுப்பிள்ளை பாஸ்கரன் மேற்கொண்டார். (ம-7,4,60)

## முதலமைச்சர்...

மன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நிறுத்தப்படுவார் எனக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் வடக்கு மாகாண சபைத் தேர்தல் இடம்பெற்றால் அது தொடர்பில் உங்கள் நிலைப்பாடு என்ன? என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பியிடம் யாழ். கொக்குவிலில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியிருந்தனர்.

இதற்குப் பதிலளித்த கஜேந்திரகுமார் எம்.பி., மாகாண சபைத் தேர்தல் இடம்பெற்றால் நிச்சயம் நாங்கள் போட்டியிடுவோம். ஏனைய கட்சிகளின் முதலமைச்சர் வேட்பாளர்களின் பெயர்களைக் கருத்தில் கொண்டால் நாங்கள் ஒரு தும்புத்தடியை நிறுத்தலாம் என நினைக்கின்றோம் என்று கூறியிருந்தார்.

கஜேந்திரகுமார் எம்.பியின் மேற்படி கருத்துத் தொடர்பில் யாழ். வடமராட்சி கிழக்கில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் சிவாஜிலிங்கத்திடம் கேள்வி எழுப்பியபோது, முதலமைச்சர் தும்புத்தடி என்றால், பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ன விளக்குமாறா? என்று அவர் திருப்பக் கேள்வி எழுப்பினார். (ம-7,4)

## யாழில் காணி...

சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்ட இந்தச் சந்திப்பில் ஆளுநர் பல்வேறு விடயங்கள் தொடர்பில் அவுஸ்திரேலியத் தூதுவருக்குச் சுட்டிக்காட்டினார்.

மக்களின் மீள்குடியமர்வு மற்றும் காணிகள் விடுவிப்புத் தொடர்பில் தூதுவர் ஆளுநரிடம் கேள்வி எழுப்பியபோது, மக்களின் மீள்குடியமர்வு இன்னமும் முழுமையடையவில்லை எனவும் காணிகள் விடுவிக்கப்பட வேண்டியுள்ளதாகவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் மக்களின் காணிகள் படிப்படியாக விடுவிக்கப்படும் என உறுதியளித்துள்ளதையும் அதற்கு அமைவாக வலி. வடக்கில் சில காணிகள் மக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதையும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

ஆட்சி மாற்றத்தின் பின்னர் முதலீட்டாளர்கள் முதலீடு செய்வதற்கான ஆர்வத்தை வெளிப்படுத்தி வருகின்றனர் என்றும், அரசாங்கத்தால் வடக்கில் மூன்று முதலீட்டு வலயங்கள் உருவாக்கப்படவுள்ளன எனவும் குறிப்பிட்ட ஆளுநர், அதற்கான உட்கட்டமைப்பு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

வடக்கில்யாழ்ப்பாண மாவட்டம் தவிர்ந்த ஏனைய 4 மாவட்டங்களிலும் உள்ள மக்களின் விவசாயக் காணிகள், குளங்கள் என்பன வனவளத் திணைக்களம் மற்றும் வன உயிரிகள் திணைக்களம் என்பனவற்றால் இங்குள்ள அரச அதிகாரிகளுக்குத் தெரியாமல் கூகுள் வரைபடத்தின் உதவியுடன் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன எனக் குறிப்பிட்ட ஆளுநர், இதனால் அந்த மக்களின் பிரதான வாழ்வாதாரமான விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது எனவும் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை வடக்கு மாகாணத்தில் காணிப் பிரச்சினை பெரும் சவாலாக உள்ளதாகக் குறிப்பிட்ட ஆளுநர், போர் காரணமாக ஆவணங்கள் அழிந்துள்ளமையால் மக்கள் அதனைப் பெற்றுக்கொள்வதில் இடர்களை எதிர்கொள்கின்றனர் என்றும் தெரிவித்தார்.

காணி நடமாடும் சேவைகள் நடத்தப்பட்டு இயலுமானவரை காணிப் பிரச்சினை தீர்க்கப்பட்டு வருவதாகவும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

மேலும் யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வெளிப்படுத்தல் உறுதிமூலமாக காணி மோசடிச் சம்பவங்கள் நடைபெற்று வருவதாகக் குறிப்பிட்ட ஆளுநர், இது தொடர்பில் கடுமையான நடவடிக்கை எடுத்த பொலிஸ் அதிகாரிகள் இடமாற்றப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார். (ம-7,4)

மஹஜன சம்பத
திகதி 2025.05.28
சீட்டிழுப்பு இலக்கம் 5843
ஆங்கில எழுத்து J வெற்றி இலக்கங்கள் 9 5 9 1 2 0
அத சம்பத J 9 1 2 0
சீட்டிழுப்பு இலக்கம் 418
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.05.28
சீட்டிழுப்பு இலக்கம் - 1873
J 09 15 44 80 J
Double Chance 31514

மெகா பவர்
திகதி 28/05/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2191
G 20 17 40 65 76

NLB ஜய JAYA
திகதி 2025.05.28
சீட்டிழுப்பு இலக்கம் 111
O 2 7 8 5

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4085
சீட்டிழுப்பு திகதி 28.05.2025
P 17 23 26 72
P

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.05.28
சீட்டிழுப்பு இலக்கம் 1152
மீனம் 03 04 27 48 மீனம்
34460 05

உத்தியோகபூர்வ முடிவுகள்
28.05.2025 வெற்றி வாரம் 551
ஆங்கில எழுத்து A மற்றும் வெற்றி இலக்கம் 4 2 6 7 9 8
78887
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,068,842.80
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2817
சீட்டிழுப்பு திகதி 2025.05.28 தினம் புதன்கிழமை
37 46 48 68 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.64,685,824.00

சனிதா
திகதி 28.05.2025 வெற்றி வாரம் 4978
10 18 56 79 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 65,255,092.40
ரூ.100,000/- 80120

ஜயோதா Jayoda
திகதி 2025.05.28 வெற்றி வாரம் 2130
07 30 33 68 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 29,575,759.60

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4529
சீட்டிழுப்பு திகதி 28.05.2025 தினம் புதன்கிழமை
24 56 57 58
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,883,559.60
208024

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
X 17 42 56 57 59
சுப்பர் இலக்கம்
1993
அடுத்த சுப்பர் ஜக்பொட்
28.05.2025 புதன்கிழமை

அட கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம் : 2643
சீட்டிழுப்பு திகதி :2025.05.28
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.58,091,186.40
03 25 27 59 K
619682

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபத்தில்...

யாழ்ப்பாணம் இந்தியத் துணை தூத ரக அலுவலர் பிரம்மஸ்ரீ சச்சி தானந்தக் குருக்கள் பிரபாகரசர்மா வின் பூதவுடலுக்கு பல்வேறு தரப்பின ரும் அஞ்சலி செலுத்தினர். யாழ்ப் பாணம் திருவள்ளுவர் கலாச்சார மண்டபத்தில் பூதவுடல் நேற்றைய தினம் காலை மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

இதன்போது இந்திய உயர்ஸ் தானிகர் ஸ்ரீசந்தோஷ்ஜா, வடமா காண அவைத்தலைவர் சி.வி.கே சிவஞானம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான டக்ளஸ் தேவா னந்தா, த. சித்தார்த்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் அஞ்சலி செலுத்தினர்.

வவுனியா ஓமந்தைப் பகுதியில் கட ந்த திங்கட்கிழமை அதிகாலை இடம்பெற்ற விபத்தில், யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரக அலுவலர் பிரம்மஸ்ரீ சச்சி தானந்தக் குருக் கள் பிரபாகர சர்மா சம்பவ இட த்திலேயே உயி ரிழந்துள்ளார்.

தனது தனிப் பட்ட விஜயமாக இந்தியா இமய மலை சாரலுக்கு வழிபாட்டிற்காக சென்று கட்டுநா யக்கா ஊடாக வருகை தந்து யாழ்ப்பாணத்தி ற்கு காரில் வந்து கொண்டிருந்த வேளை டிப்பர் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளார்.

இந்த விபத் தில் அவரது மனைவி மற்றும் பிள்ளை காயமடைந்த நிலை யில் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர். இந்நிலையில், பிரபாகரசர்மாவின் இறுதிக் கிரியை கள் நேற்றைய தினம் புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று, செம்மணி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது. (ம-4,7)

வேலையாட்கள் தேவை
காட்வெயார் கடைக்கு
1. பொருட்கள் ஏற்றுவதற்கும் எடுத்துக் கொடுப்பதற்கும் ஆள்
2. மனேஜர், பில்கிளார்க் (கணினி)
3. கணக்காளர்
4. லேத் ஒப்பரேட்டர், வெல்டர்
+94772523155
(1178)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3069)
076 825 7716 (ஆகாஸ்)

வைத்தியம்
கை விறைப்பு | கால் விறைப்பு | கை எரிவு | கால் எரிவு
குழந்தை இன்மை | நாட்பட்ட தலைவலி
மூலம் | கழுத்து வலி | கால் பாத விறைப்பு
முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி
Sciatica | Rheumatic Arthritis | நாட்பட்ட சளி
தலைக்கு இரத்தம் போகாமை, வாதம்
நம்பிக்கையான மூலிகை, ACU சிகிச்சைகள்
நல்லூர், யாழ்ப்பாணம்.
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : 0777 301 669
(1177)

## உறவுகள்...

ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவர், செயலாளர் உள்ளிட்ட வர்களால் போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த போராட்டமானது எதிர்வ ரும் (31.05.2025) அன்று காலை 9 மணிக்கு மாங்குளம் நகரில் நடைபெற உள்ளது.

எதிர்வரும் (31) ஆம் திகதி அன்று 3007 ஆவது நாளாக தங்களுடைய உறவுகளுக்கான நீதி கோரி இந்த போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ள தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலையில், குறித்த போராட் டத்திற்கு அனைத்துத் தரப்பினரும் வருகை தந்து ஆதரவு வழங்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-4,7)

## தமிழின...

கனடா பிரம்டன் நகரில் சிங்காவுசி பூங்காவில் தமிழின அழிப்பு நினை வகம் இந்த மாதம் 10 ஆம் திகதி உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக் கப்பட்டது.

தமிழின அழிப்பு நினைவகம் என்ற பெயரில் அமைந்துள்ள இந்த நினை வுத்தூபியை பிரம்டன் மேயர் பட்ரிக் பிரவுண் திரைச்சீலை நீக்கி உத்தி யோகபூர்வமாகத் திறந்து வைத்தார்.

அதனைத்தொடர்ந்து அரசியல் வாதிகள், பாதிக்கப்பட்ட பொதுமக்கள், புலம்பெயர் தமிழர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் இணைந்து நாடா வெட்டி திறந்துவைத்தனர்.

இந்நிலையில் இந்த நினைவகம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நள்ளிரவுக்குப் பின்னர் சேதப்படுத் தப்பட்டுள்ளது என தெரியவருகின்றது.

தமது முகங்களை மூடிய நிலையில் இனந்தெரியாத நபர்கள் நினைவ கத்தில் உள்ள மின்குமிழ்களை சேதப்படுத்தியுள்ளனர்.

இந்த சம்பவம் குறித்து Peel பிராந் திய பொலிஸில் முறையிடப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணை களை ஆரம்பித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் இதுவரை சந் தேகநபர்கள் எவரும் கைது செய்யப் படவில்லை எனத் தெரியவருகிறது.

இந்நிலையில் சிசிரிவி கமராக் களின் உதவியுடன் சந்தேகநபர்கள் வெகுவிரைவில் கைது செய்யப்படுவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் கனடாவின் தமிழின அழிப்பு நினைவகத்திற்கு இலங்கை யின் சிங்கள அரசியல்வாதிகள் மற்றும் அநுர அரசாங்கம் கடும் எதிர்ப்பை தெரிவித்து வந்தமை குறிப்பிடத் தக்கது. (ம-4,7)

# மரண அறிவித்தல்

தோற்றம்
1947 - 05 - 29



மறைவு
2025 - 05 - 28

## சீவரத்தினம் செல்வரத்தினம் [குஞ்சு]

ஊரெழு கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சீவரத்தினம் செல்வரத்தினம்(குஞ்சு) அவர்கள் நேற்று 28.05.2025 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லி - இளையபிள்ளை தம்பதியினரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான முத்துக்கிருஷ்ணன் - சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சீவரத்தினம்(CTB) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிறிலிங்கம் மற்றும் ரஜனி, ரமேலா (ஆசிரியர்), றஞ்சிதா(அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ரமேஸ், ஸ்ரீதரன்(ஆசிரியர்), பற்குணராசா(அவுஸ்திரேலியா), அனுஷா ஆகியோரின் அன்பு மாமியாரும் தரணிகா, கிருஷிகான், அஸ்மினா, அட்சயன், கர்ணிகா, அதிக்ஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் தங்கராசா, தங்கரத்தினம் மற்றும் காலஞ்சென்றவர்களான மனோன்மணி, பூமணி, ராசமணி, சந்திரன், நாகராசா, மகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 29.05.2025 வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10.00 மணிக்கு புன்னாலைக்கட்டுவன் விலங்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஊரெழு கிழக்கு,
வளர்பிறை.

தகவல் : குடும்பத்தினர்
077 019 4492
(C-3071)

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • பருத்தித்துறை • திருகோணமலை • வல்வெட்டித்துறை • கோப்பாய் • புத்தூர் • பண்டத்தரிப்பு • சங்கானை • கொழும்பு
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-3068)

கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை
5-9 Kg 3970/-
11-16 Kg 2800/-
21-30 Kg 2640/-
குறைந்த விலை - நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery
UK 11Kg - 1420/- France 11Kg - 2220/- Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2510/- Australia 11Kg - 1980/- Italy 11Kg - 2250/-
எமது நேரடி கிளைகள்
கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
V2 TRAVELS 076 822 6241 076 822 6237
(C-3068)

பணியாளர் தேவை
சாவகச்சேரி நகரில் இயங்கி வரும் கல்லு அடிக்கும் யாட் ஒன்றிற்கு மெசின் கல்லு அடிப்பவர், வேலி தூண் போடுதல் போன்ற வேலைகளுக்குரிய பணியாளர் தேவை.
தங்குமிட வசதிகள் வழங்கப்படும்.
077 940 0963
(1180)

காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் ஊரெழுவில் பலாலி வீதிக்கு அருகாமையில் 27 பரப்பு காணி விற்பனைக்கு 18 அடி பாதையுடன் 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
♦ பலாலி வீதி, ஊரெழுப் பிள்ளையார் கோவில் முன் வீதி 150m தூரத்தில்
♦ நல்ல சூழல், நன்னீர் ஊற்று நிலம், செம்மண் காணி
♦ குடியிருப்புகள் சூழவுள்ள காணி
♦ ஒரு பரப்பின் விலை இருபத்தி ஐந்து இலட்சம் ரூபாய் 2500000/= மட்டுமே
♦ பார்வையிடும் நேரம் காலை 8 மணி முதல் 6 மணி வரை
தொடர்புகளுக்கு :
076 739 0413, 077 623 4204
(4407)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாப [illegible] னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.05.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org